பனைச் செல்வம்

(திங்கள் வெளியீடு)

ஆசிரியர்: வே. வ. இராமசாமி

குரோதி௵ ஆனீ ஜூன் 1964



வெளியிடுவோர்:

சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம்

தியாகராயநகர் :: சென்னை—17

விலை : 25 காசு

பொருளடக்கம்

			பக்கம்
1.	பத்து லட்சம் பதநீர் பாட்டில் விற்பனை—(தலையங்கம்)	...	I
2.	நேருவும், பனைத் தொழிலும்—திரு. கே. சம்பந்தம்	...	1
3.	இராமநாதபுரம் மாவட்டத்தில் பனைத் தொழில் பணி	...	4
4.	வரலாறு காணாத மாவட்டக் கருத்தரங்கு	...	9
5.	வல்லுநர் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும் —திரு. வி. பி. ஆர். சிதம்பரம்	...	16
6.	சுற்றறிக்கை	...	23

ஆண்டுச் சந்தா ரூ. 3

பனைச் செல்வம்

(மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளன வெளியீடு)

பனை 4 குரோதி ௵ ஆனி ௴ பாளை 9

பத்து லட்சம் பதநீர் பாட்டில் விற்பனை

(வே. வ. இராமசாமி)

சென்னை நகரில் மாநில சம்மேளனம் 1958-ம் ஆண்டு முதல் சுகாதார முறைப்படி பதநீர் விற்பனையை மேற்கொண்டு செவ்வையாக நடத்தி வருகிறது. ஆரம்ப காலத்தில் பதநீர் கொள்முதல் செய்வதற்கு ஊர்திகள் இல்லாத காரணத்தால் குதிரை வண்டிகளில் பதநீர்க் கேன்களை ஏற்றிவந்து, விற்பனை நிலையங்களுக்கு விநியோகித்து வந்தோம். பதநீரைப் பற்றிப் புரியாதிருந்த சென்னை நகரப் பெருமக்களிடையே இதன் ஊட்டச் சத்துக்கள், உயிர்ச் சத்துக்கள், உலோகச் சத்துக்கள் பற்றி ஆதாரங்களோடு எடுத்துக் கூறி விற்பனையை விரிவுபடுத்த வேண்டியதிருந்தது.

முதன் முதலில் சென்னை நகரில் பதநீர் விற்பனை நிலையத்தை தற்போதைய முதலமைச்சர் கனம் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் துவக்கி வைத்தார்கள். அதன்பின்னர் ஒவ்வொரு பருவகாலத்திலும் பதநீர் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டுக்கு முந்திய ஆண்டில்

ரூ. 27,000-க்கும், சென்ற ஆண்டு ரூ. 37,000-க்கும் பதநீர் விற்பனை செய்யப் பட்டது. ஆண்டுதோறும் பதநீர் பருகுவோரின் எண்ணிக்கை பெருகி வருவதாலும், சுத்தமான—சுவையான பதநீரை விநியோகிக்க வேண்டும் என்ற எண்ணத்தாலும் மாதவரம் பால் பண்ணையிலுள்ள 11,000 பனை மரங்களைக் குத்தகைக்கு எடுத்து, பனையேற்று வல்லுநர்களை வேலைக்கு அமர்த்தி சம்மேளனத்தின் நேர்பார்வையில் பதநீர் சேகரித்து வருகிறோம். இதைத் தவிர கோடம்பாக்கத்திற்கு அருகாமையிலுள்ள கந்தமாநகர், நல்லாங் குப்பம் ஆகிய இரு ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களிலும் பதநீர் வாங்கி, சுகாதார முறைப்படி வடிகட்டி, பதப்படுத்தி, பாட்டில்களில் அடைத்து விநியோகம் செய்து வருகிறோம்.

சென்னையைத் தவிர தஞ்சாவூர், திருப்பத்தூர் ஆகிய இடங்களிலும் மாநில சம்மேளனத்தின் நேர்பார்வையின் கீழ் பதநீர் விற்பனை நிலையங்கள் நடைபெறுகின்றன. இவைகள் பிறருக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் வகையில் இலாபம் கருதாது நடத்தப் பெறுகின்றன.

பதநீர் விற்பனையைத் தீவிரப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு மாநில சம்மேளன நிர்வாகக் குழுவினர் 23—3—1964-ம் தேதிய கூட்டத்தில் ஒரு லட்சம் ரூபாய் பெறுமான பதநீர் விற்பனை செய்ய வேண்டுமென குறியிட்டளவை (Target) நிர்ணயித்தனர். இதன்படி சம்மேளன ஊழியர்கள் பதநீர் விற்பனையில் தீவிரமாக ஈடுபட்டுக் குறியிட்டளவைத் தாண்டிவிட்டனர்.

பதநீர் விற்பனையை மேலும் பெருக்கமுடியும் என்ற நம்பிக்கையை இவ்வெற்றி தெளிவுறுத்தி விட்டது. பதநீரைப் பதநீராகப் பருக லட்சோப லட்சம் மக்கள் ஆர்வத்தோடு காத்திருக்கின்றனர். பொது மக்களின் நலன் கருதி பதநீரை பனிக்கட்டியாக மாற்றி இரவு 10 மணி வரை விற்பனை செய்ய அரசினரிடம் அனுமதி கேட்டுள்ளோம். விரைவில் அனுமதி வழங்குவார் களாயின் ஒவ்வொரு நாளும் கடற்கரை, திரைப்பட நிலையங்கள், நாடக அரங்குகள் முதலிய இடங்களில் குறைந்த விலையில் பதநீர் விநியோகிக்க ஏதுவாகும்.

பதநீரை பனிக்கட்டியாக்கி இரண்டுமாதம் குளிர் அறையில் வைத்திருந்தபோது அது கெடவில்லை; சுவை மாறவில்லை. பனிக்கட்டியாக மாற்றப்பட்ட பதநீரை மாநில மது விலக்குக் குழு கூட்டம் அண்மையில், சென்னையில் உள்துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்றபோது உயர்தர அதிகாரிகளுக்கு விநியோகித்தோம். இதுபோல் நாடெங்கும் உள்ள அனைவருக்கும் எல்லாக் காலத்திலும் பதநீர் விநியோகிக்க அனுமதி வேண்டுமென அரசினரை வற்புறுத்தி வருகிறோம். அனுமதி கிடைத்தால் ஆண்டு

முழுவதும் நல்ல முறையில் பதநீர் வழங்கி, இத்தொழிலில் துரித வளர்ச்சியை ஏற்படுத்துவோம் என அரசினருக்கு உறுதி கூறுகிறோம்.

நேரடியாய் பதநீர் விற்பதில் கீழ்க்கண்ட நன்மைகள் உள்ளன.

(1) பதநீரை உற்பத்தி செய்வோர், வெல்லம் செய்வதைக் காட்டிலும் அதிகம் ஊதியம் பெறுகின்றனர்.

(2) வெல்லம் காய்ச்ச விறகின்றி கஷ்டப்படும் உற்பத்தியாளர்களின் வேலை குறைகிறது.

(3) பதநீர் குடிப்போர் நேரடியாய் சைவ சுத்த பானமாகிய பதநீரை, ஊட்ட சத்துகள் குறையா வண்ணம் சாப்பிட்டு பரவசமடைகின்றனர்.

(4) இதர குளிர்பானங்களின் விலை அதிகரித்துகொண்டு போகும்பொழுது நாம் 8 அவுன்ஸ் பாட்டில் 10 பைசாவுக்கே விற்கிறோம்.

எங்கள் மாவட்ட சம்மேளனங்களும், பதநீர் விற்பனையில் ஊக்கம் காட்டுகின்றன. ஆனால் லைசென்ஸ் பெறுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. அடுத்த பதநீர் சீசனில் உரிய காலத்தில் மாவட்ட சம்மேளனங்களுக்கு லைசென்ஸுகளை புதுப்பிகக வேண்டுகிறோம்.

இந்த ஆண்டில் சென்னையில் 8 லட்சம் பாட்டில் விற்கவும் தஞ்சையில் 2 லட்சம் பாட்டில்கள் விற்கவும் ஆதரவு தந்த பெருமக்களுக்கு எங்கள் நன்றி.

அட்டைப்பட விளக்கம் :

காலஞ்சென்ற நேரு மதுரையில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்துக்கு விஜயம் செய்தபோது, வெள்ளைப் பனஞ்சீனி உற்பத்தி செய்வதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். பனஞ்சீனி நன்றாக இருக்கிறது என்றும் பாராட்டினார்.

நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது,
முழு வலிமையுடன் அதைக் காருங்கள்.

—ஜவாஹர்லால் நேரு



நாட்டைப் பாதுகாப்பது உங்கள் பொறுப்பு

நம் சுதந்தரத்தைக் காக்க நமது பூரண முயற்சியும், ஒழுங்குமுறையும், தியாகமும் தேவை. சலியாது உழைத்து, உற்பத்தியை அதிகரித்து, நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்த உதவுவோம்.

உங்கள் ஒழுங்கு முறையே இந்தியாவின் பாதுகாப்பு

அறிவிப்பு

அன்புடையீர் !

1. மாநில சம்மேளனத்திடம் பல்வேறு வகைக்குரிய பனைத் தொழில் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற விரும்பும் ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கத்தார் தங்களின் விண்ணப்ப மனுக்களை நேரடியாக மாநிலச் சம்மேளனத்துக்கு அனுப்பிவருகின்றனர். இவ்வாறு நேரடியாக அனுப்பப்படும் விண்ணப்பங்களும், கோரிக்கைகளும் கிராமக் கைத்தொழில் அதிகாரியின் சிபாரிசு இல்லாமல் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படமாட்டாது. ஆகையால், ஒவ்வொரு ஆரம்பச் சங்கமும் உதவி கோரி விண்ணப்பிக்கும்போது தங்கள் விண்ணப்பங்களை அந்தந்த மாவட்டக் கிராமக் கைத்தொழில் அதிகாரிக்கு அனுப்பவேண்டும். கிராமக் கைத்தொழில் அதிகாரியின் சிபாரிசின் பேரில் மாநில சம்மேளனம் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும். கிராமக் கைத் தொழில் அதிகாரிக்கு அனுப்பும் மனுவின் பிரதியை மாநிலச் சம்மேளனத்திற்கும் அனுப்பலாம்.

2. இரண்டாவதாக 'பனைச் செல்வம்' சந்தாவை மணியார்டர் மூலம் அனுப்புவோர், கூப்பனில் தெளிவாகத் தங்கள் விலாசத்தை எழுதவேண்டும். தவருன விலாசமாக இருந்தால், பத்திரிகை திரும்பி வந்துவிடுகிறது. எனவே, மணியார்டர் கூப்பனில் தெளிவான முகவரியை புரியும்படி எழுதியனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

3. ஏராளமான ஆரம்பச் சங்கங்கள் இதுகாறும் சந்தா செலுத்தாமல் உள்ளன. அவைகள் உடனே ரூ. 3-ஐ மணியார்டர் மூலம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். இல்லா விடில் தொடர்ந்து பத்திரிகை அனுப்ப இயலாதெனத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

4. மாநிலச் சம்மேளனத்தார் பனைத் தொழில் பற்றிய அரிய பல கருத்துக்களைக் கொண்ட நூல்களை வெளியிட்டுள்ளனர். அவை களைச் சங்கத்தின் பேரால் வாங்கிக்கொள்ளலாம். மூன்று புத்தகங் களின் விலை தபால் செலவு உட்பட ரூ. 5-50 ஆகிறது. உடனே பணத்தையனுப்பி பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

பனைத் தொழில் ... ரூ. 3=50 இனிக்கும் பதநீர் ... ரூ. 0=50

பரக்குன்னு பனை ஒத்தித் திட்டம் ... ரூ. 0=30

க. சேவியர்,

விளம்பர அதிகாரி.

நேரு பதநீர் அருந்துகிறார்!

பொருட்காட்சியில் நேரு பனந்தடியை வைத்துக்கொண்டு,
இதர காட்சிகளை பார்வையிடுகிறார்.

நேருவும், பனைத் தொழிலும்

திரு. கே. சம்பந்தம்

அகில இந்திய பொருட்காட்சி நடக்கும் இடங்களிலெல்லாம் காலஞ்சென்ற நமது மதிப்புக்குரிய பிரதமர் ஜவாஹர்லால் நேரு அவர்கள் பொருட்காட்சியில் பனைத் தொழில் பிரிவைப் பார்க்கத் தவறுவதில்லை. பனைகளிலிருந்து கிடைக்கும் பொருள்களைப் பார்த்து வியந்து பாராட்டி வந்திருக்கிறார்.

ஒரு குவளை ஈச்சம் பதநீரைச் சாப்பிட்டுவிட்டு கீழ்க்கண்ட கருத்தைக் குறிப்புப் புத்தகத்தில் எழுதியுள்ளார்.

"பதநீரை அருந்தினேன். பதநீர் ருசிகரமாகவும் இனிப்பாயும் இருக்கிறது."

ஒரு பொருட்காட்சியில் பனம் வைரத்தால் செய்த வெவ்வேறு விதமான 'பேட்டர்ன்' ஸ்டிக்குகளைப் (பிரம்புகளை) பார்த்து ஆச்சரியப்பட்டார். தம் கையிலிருந்த 'பேட்டர்ன்' ஸ்டிக்கை பொருட்காட்சியில் வைத்துவிட்டு பனம் வைரத்தாலான 'பேட்டர்ன்' ஸ்டிக்கை எடுத்துச் சென்றார்.

முதல் தடவையாக மதுரை அருகிலுள்ள காந்தி கிராமத்துக்கு ஏறத்தாழ பத்து ஆண்டுகளுக்கு முன்பு நேருஜீ தமது மகள் இந்திரா காந்தியுடன் வந்தார். அப்பொழுது கதர் கிராமக் கைத்தொழில் போர்டின் கீழ் ஒரு பனைப் பொருள் ஆராய்ச்சி நிலையம் உடன்குடியில் பணியாற்றிவந்தது, அந்த நிலையத்திலிருந்து பனங் குச்சியாலான 'பேட்டர்ன்' ஸ்டிக்கும், பனையோலையால் செய்த அழகிய கைப் பையும் நேருஜியிடம் கொடுக்கும்படி காந்தி கிராம நிர்வாகி திரு. ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு வழிகாட்டி நிலையம் அனுப்பி வைத்தது. இக்குச்சியையும், பையையும் பெற்றுக்கொண்டு, அதற்குக் கீழ்க்கண்டவாறு நேருஜி தமது கைப்பட எழுதியனுப்பியிருந்தார்.

"Dear Friend,
Thanks for the articles.
JAWAHARLAL NEHRU."

நேருவும் பனஞ்சீனியும்

மதுரையில் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் ஆதரவில் நடைபெற்ற பொருட்காட்சியில், பதநீரிலிருந்து வெள்ளைச் சீனி செய்யும் இயந்திரம் அமைக்கப்பட்டிருந்தது. பதநீரிலிருந்து தயாரிக்கப்பட்ட பனஞ்சீனியை அன்றைய கதர்-கிராமக் கைத்தொழில் கழக உப-தலைவி டாக்டர் செளந்தரம் இராமச்சந்திரன் அவர்கள் நேருஜியின் கையில் கொட்டி ருசி பார்க்கச் செய்தார்கள். பனஞ்சீனியை ருசிபார்த்த நேரு பனையின் மகிமையைப் பாராட்டினார்.

பனங்கற்கண்டு

கடந்த 1963-ம் ஆண்டில் இரண்டாவது தடவையாக காந்தி கிராமத்திற்கு வந்தார். முக்கியமாகப் பனைத் தொழில் பொருட்காட்சிக்கு வருவாரோ மாட்டாரோ என்று சந்தேகித்துக் கொண்டிருந்தோம். பனைப் பொருளால் தயாரிக்கப்பட்ட பனஞ்சீனி, கற்கண்டு முதலியவற்றைக் கொடுக்கலாமா, கொடுக்க வேண்டாமா என்ற ஐயத்தோடிருந்தோம். கடைசியில் பனைத் தொழில் ஸ்டாலுக்குள் புகுந்த நேருஜி பனை நாரால் பின்னியிருந்த கட்டிலைப் பார்த்து ஆச்சரியப்பட்டார். பனையின் எந்த பாகத்திலிருந்து இந்நார் கிடைக்கிறதென்பதைக் கேட்டார்.

சென்னை மாநிலத்தில் நடக்கும் பனைத் தொழில் பற்றிய புள்ளி விவரங்களை, பனையோலையில் எழுதி, ஓலைப் பெட்டியில் அடைத்துக் கொடுத்தோம். ஏடேடுகளாகப் புரட்டிப் பார்த்து புள்ளி விவரங்களைக் கண்டு மகிழ்ந்தார். டாக்டர் செளந்தரம் இராமச்சந்திரன் அவர்கள் பனங்கற்கண்டின் பெருமையை எடுத்துச் சொல்லுமுன் "எனக்குத் தெரியும்" என்று கூறி ஒரு பனங் கற்கண்டை எடுத்து நேருஜி வாயில் போட்டு ஒதுக்கிக்கொண்டு புறப்பட்டார். ★

கட்டாந்தரையிலும் செழிப்புடன் வளர்வது பனை ஒன்றே!

செயற்கை வைட்டமின் 'சி' உடலுக்கு உதவாது

காய்கறியால் கிடைக்கும் இயற்கைச்சத்து அவசியம்

உடல் வளர்ச்சிக்கு வைட்டமின் 'சி' மிகவும் அத்தியாவசியம். உணவுப் பொருள்கள்மூலம் போதிய அளவு இந்த வைட்டமின் கிடைக்காமல் போவதால் செயற்கை முறையில் இந்த வைட்டமினைத் தயாரித்து உபயோகிக்க முடியுமா என்ற ஆராய்ச்சியை மேற்கு ஜெர்மன் உணவுச் சத்து நிபுணர் டாக்டர். ஹாபில் ஹான்ஸ் ஹோங்கே நடத்தியிருக்கிறார். மருந்து மாத்திரைகளினால் இந்த வைட்டமின் பற்றுக்குறையைச் சரிக்கட்ட முடியாது என்பது இவர் கண்டறிந்த உண்மை.

சென்ற சில வருடங்களாகவே வைட்டமின் 'சி' பற்றிய விவரங்களை ஆராய்ந்து வருகிறார். இரண்டு வயது முதல் 14 வயதுள்ளவர்கள் 814 பேரைக்கொண்டு ஆராய்ந்து சில முக்கியமானத் தகவல்களைக் கண்டறிந்திருக்கிறார். குழந்தைகளில் 88 சத விகிதம் பேர் எவ்வித நோயும் இன்றி வைட்டமின் 'சி' குறைவு காரணமாகவே உடல் வளர்ச்சி குன்றியுள்ளனர் என்பது இவர் கண்டுபிடித்த உண்மை.

வைட்டமின் 'சி' போதிய அளவுக்கு உடலுக்கு கிடைக்கவில்லை என்றால் பல கோளாறுகள் ஏற்படும். சாதாரணமாக இந்த வைட்டமின் அன்றாட உணவின் மூலமே கிடைப்பதால் எத்தகைய உணவை உட்கொள்ளவேண்டும் என்பது குறித்தும் இவர் ஆராய்ந் திருக்கிறார். பழங்கள், காய்கறிகளைப் பாதுகாப்பதில் கவனக்குறைவு காரணமாக அவை களிலுள்ள வைட்டமின் 'சி' மிகவும் பாதிக்கப்படுகிறது. சில காய்கறிகள் சமைக்கப்படும் போதும் அவைகளிலுள்ள 'சி' வைட்டமின் போய்விடுகிறது.

பலரைக்கொண்டு ஆராய்ச்சிகளை நடத்தி அவர்களுக்கு ஒவ்வொரு நாளும் உணவு மூலம் 'சி' வைட்டமின் எவ்வளவு கிடைக்கிறது என்பதை இவர் கண்டறிந்தார். அதன் அளவு சராசரி 79 மில்லிகிராம் என்பது அவர் கருத்து. மேலும் ஆராய்ச்சிகளில் ஒருவருக்கு 44·8 மில்லிகிராம் 'சி' வைட்டமின்தான் கிடைக்கிறது என்பது தெரிய வந்தது. ஆனால் வாலிப வயதின்போதும், அதிக கஷ்டங்களைத் தாங்கும் காலத்திலும் 100 முதல் 125 மில்லிகிராம் தேவைப்படும்.

ஆகவே செயற்கை முறையில் 'சி' வைட்டமினைத் தயாரித்து உபயோகிக்கலாமா என்பதையும் அவர் ஆராய்ந்தார். 10 இளம் வயதினர்களைக்கொண்டு இயற்கை வைட்டமின் 'சி'யை ஒரு சிலருக்கும் செயற்கை வைட்டமின் 'சி'யை ஒரு சிலருக்கும் கொடுத்து சுமார் 41 தினங்கள் இவர் சோதனை செய்தார். இயற்கை வைட்டமின் சப்ளைக்காக ஆரஞ்சு ரசமும், செயற்கை வைட்டமின் சப்ளைக்காக அஸ்கார்பிக் அமிலமும் உபயோகிக்கப்பட்டன. உடல் உறுப்புகள் இயற்கை வைட்டமின் 'சி'யை சேமித்துக் கொள்வது போல செயற்கை வைட்டமின் 'ஸி'யை சேமித்து வைப்பதில்லை என்பது தெரிய வந்தது. இந்த ஆராய்ச்சி களிலிருந்து செயற்கை வைட்டமின் 'சி' பற்றுக்குறையை மருந்து மாத்திரைகள் மூலம் சரிக் கட்ட முடியாது என்று கண்டுபிடிக்கப்பட்டது. வைட்டமின் 'சி' உள்ள உணவுப் பொருள்களை உபயோகிப்பதன் மூலமே நிறைவு செய்ய முடியும்.

இனிய உளவாக இன்னாத கூறல்—கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

O. 1312 பணகுடி பனைவெல்ல உற்பத்தி—விற்பனை கூட்டுறவு சங்கம்

1963—64-ம் ஆண்டு உற்பத்தியும், விற்பனையும்

வருடம்	கொள்முதல்					விற்பனை				
	பனை வெல்லம்	தும்பு	இதர பனைப் பொருட்கள்	சேல்ஸ் டிப்போ	ஆக மொத்தம்	பனை வெல்லம்	தும்பு	இதர பனைப் பொருட்கள்	சேல்ஸ் டிப்போ	ஆக மொத்தம்
	ரூ. ந.பை	ரூ. ந.பை	ரூ. ந.பை	ரூ. ந.பை	ரூ. ந.பை	ரூ. ந.பை	ரூ. ந.பை	ரூ. ந.பை	ரூ. ந.பை	ரூ. ந.பை
ஏப்ரல் '63 ...	6,741 50	965 06	447 14	...	8,153 70	6,905 10	1,402 02	598 16	...	8,906 23
மே '63 ...	5,581 56	645 23	229 26	...	6,456 05	4,859 27	473 74	142 64	...	5,475 65
ஜூன் '63 ...	1,591 94	1,220 72	84 11	...	2,896 77	3,028 36	1,500 60	739 93	...	5,268 89
ஜூலை '63 ...	597 41	2,292 39	46 76	923 84	3,860 40	277 73	2,152 21	54 37	105 13	2,589 44
ஆகஸ்ட் '63 ...	1,829 99	1,514 85	89 01	1,837 14	5,270 99	2,633 12	1,692 67	206 78	2,506 20	7,043 77
செப்டம்பர் '63 ...	58 50	2,830 52	177 56	1,861 18	4,927 76	113 41	2,332 52	201 44	1,187 79	3,835 16
அக்டோபர் '63 ...	...	2,937 26	60 33	1,487 77	4,495 36	38 90	1,582 03	232 10	2,242 94	4,095 97
நவம்பர் '63 ...	236 06	1,417 56	40 70	103 59	1,797 91	245 95	2,496 76	181 26	854 17	3,778 14
டிசம்பர் '63 ...	228 89	2,288 70	288 15	553 13	3,358 87	232 85	3,281 79	169 40	677 43	4,361 47
ஜனவரி '64 ...	2,248 17	3,049 27	68 31	436 42	5,802 17	2,388 48	3,200 69	266 58	365 39	6,221 14
பிப்ரவரி '64 ...	7,898 72	2,449 95	78 09	120 43	10,547 19	8,025 39	2,907 68	117 82	139 44	11,190 33
மார்ச் '64 ...	12,870 67	2,190 15	99 70	1 68	15,162 20	13,163 09	2,770 86	84 37	33 71	16,052 09
ஆகமொத்தம் ...	39,883 41	23.801 66	1,709 12	7,335 18	72,729 37	41,916 65	25,794 52	2,994 85	8,112 26	78,118 28

குறிப்பு:—திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பணகுடி ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கத்தில் 250 உறுப்பினர்கள் உள்ளனர். இச்சங்கத்தில் ரூ. 2,345 பங்குத் தொகை செலுத்தியுள்ளனர். 1963-64-ம் ஆண்டில் ரூ. 78,818—28 பெறுமான பனைப்பொருட்களை இச்சங்கம் விற்பனை செய்துள்ளது.

D. ஐசக் நாடார், தலைவர்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பனைத்தொழில் பணி

பனைத் தொழிலில் பழம் பெருமை வாய்ந்த மாவட்டங்களுள் இராமநாதபுரம் ஒன்று. இங்கு உற்பத்தி செய்யப்படும் பனைவெல்லமும், பனையோலைப் பொருட்களும் புராதனப் பெருமை வாய்ந்தவை. இராமேஸ்வரம் சென்று வரும் ஒவ்வொரு பக்தரும் தம்மாலியன்ற அளவு பனையோலைப் பொருட்களை வாங்காமலிருக்க மாட்டார்கள்.

1947-ம் ஆண்டு மதுவிலக்கு செயல்படுத்தப்பட்டபோது வேலை வாய்ப்பிழந்த பனைத் தொழில் வல்லுநர்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் பொறுப்பு நில வருவாய்த் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. 1949-ம் ஆண்டு கூட்டுறவுத் துறை மூலம் பனைத் தொழில் அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. பனைத் தொழில் மூலம் வருவாயை உயர்த்திக் கொள்ளும் பொருட்டு துணைத் தொழில்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன. இது ஒரு பெருந் தொழிலாக விளங்குகின்ற காரணத்தால் 1957-ம் ஆண்டு தொழில் வர்த்தக இலாகாவுக்கு மாற்றப்பட்டது. இவ்விலாக்காவினரால் நிர்வகிக்கப்பட்டபோது 1958-ம் ஆண்டு மாநில பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம் என்ற பேரமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. கதர் கிராமக் கைத்தொழில் கழகம் தோற்றுவிக்கப்பட்ட பின்னர் பனைத் தொழில் வளர்ச்சிப் பணிகளில் துரித வளர்ச்சி ஏற்பட்டு வருகிறதென்றால் மிகையாகாது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் தற்போது 171 ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவைகளில் மொத்தம் 27,312 உறுப்பினர்கள் ரூ. 73,208 பங்கு மூலதனம் செலுத்தியுள்ளனர். இம்மாவட்டத்திலுள்ள பனைத் தொழில் வல்லுநர்களில் 70 சத விகிதம் பேர் கூட்டுறவு அமைப்பின்கீழ் ஒன்றுபட்டு பனைத் தொழில் புரிகின்றனர்.

பதநீர் பருவ காலம் பிப்ரவரி முதல் ஆகஸ்ட்வரை உள்ளது. இந்த ஏழு மாதங்களில் பனைத் தொழில் புரிய பனை மரங்களை பனை ஒன்றுக்கு ஒரு ரூபாய் அல்லது ஒன்றே கால் ரூபாய் வாடகை செலுத்திப் பெறுகின்றனர். சுமார் 15 சத விகிதம் பேருக்கு ஒரு சிறிதளவு பனைகள் இருப்பதாகத் தெரிகிறது. பதநீர் வார முறையில் பனைகளை எடுப்பதால் பனைத்தொழில் வல்லுநர் தன் வருமானத்தில் பாதியைப் பனைமரச் சொந்தக்காரரிடம் ஒப்படைக்க வேண்டியுள்ளது.

சாதாரண வல்லுநர் ஒருவர் நாள் ஒன்றுக்குச் சராசரியாக 25 பனை மரங்களில் பதநீர் இறக்குகிறார். சாயல்குடியைச் சேர்ந்த திரு. மாணிக்க நாடார் தினம் ஒன்றுக்கு 100 மரம் ஏறமுடியும் என்பதை மெய்ப்பித்துக் காட்டியுள்ளார். கதர் கிராமக் கைத்தொழில் கழகத்திற்கு பனைத் தொழில் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட பின்னர் ஒரு வல்லுநரின் தின வருமானம் ரூ. 2-லிருந்து ரூ. 3-ஆக உயர்ந்துள்ளது.

பதநீர்

பதநீர் இறக்குவதற்கும், விற்பனை செய்வதற்கும் அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப்படுகின்றன. தனித் தனியே பதநீர் விற்பனை செய்துகொள்ள அரசினர் அனுமதி வழங்கியிருப்பதால் ஆண்டு தோறும் சுமார் 7,000 பேர் தெருத் தெருவாகப் பதநீர் விற்பனை செய்கின்றனர். பெரும்பாலும் பெண்களே இதைக் குடங்களில் தலைச் சுமையாக எடுத்துச் சென்று விநியோகிக்கின்றனர்.

ஆண்டு		வழங்கப்பட்ட பர்மிட்டுகள்	வழங்கப்பட்ட லைசென்சுகள்
1960—61	...	5,720	8,169
1961—62	...	6,491	9,145
1962—63	...	7,604	8,746

தற்போது பதநீர் விற்பனை நிலையங்கள் மூலம் இதை நாகரிக முறையில் விற்பனை செய்யத் தூண்டப்பட்டு வருகிறார்கள். அருப்புக்கோட்டையிலும், பெருமாள்பட்டியிலும் இவ்வித நிலையம் நடத்த 1961–62-ல் உபகரணங்கள் வாங்கிக்கொள்ள ரூ. 150 மானியமாக வழங்கப்பட்டது. 1962–63-ல் மங்காபுரம் ஆரம்பச் சங்கம பதநீர் விற்பனை நிலையம் நடத்தி வெற்றி கண்டுள்ளது. கீழ்க் கண்ட சங்கங்கள் 1963–64-ல் பதநீர் விற்பனை நிலையங்கள் நடத்தி வருகின்றன.

(1) மங்காபுரம் ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

(2) அருப்புக்கோட்டை ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

(3) பரமக்குடி ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

(4) இராஜபாளையம் ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

இராமநாதபுரம்—மதுரை மாவட்டப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம் 1962–63-ல் பதநீர் விற்பனை நிலையங்களை நடத்தின. ஜம்புரோபுரம் ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம் ரூ. 1,740 பெறுமான 15,536 லிட்டர் பதநீரை மேற்படிமாவட்ட சம்மேளன விற்பனை நிலையங்களுக்குக் கொடுத்துள்ளது. நிலையங்கள் மூலம் ரூ. 4,140-க்கு பதநீர் விற்பனை செய்யப்பட்டது.

இவ்விற்பனை நிலையங்களில் பதநீரைக் குளிர்வித்து அழகான அல்கதீன் பாட்டில்களில் அடைத்து விற்கின்றனர். எட்டு அவுன்ஸ் கொண்ட ஒரு பாட்டிலின் விலை பத்து நயா பைசாதான! இப்பானம் மிகுந்த கிராக்கியுடன் மதுரை நகரெங்கும் விற்பனை செய்யப்பட்டது. பஸ் நிலையம், இராமநாதபுரம் சாலை, ஹார்வி மில், அரசாங்க வைத்திய நிலையம் முதலிய இடங்களில் பதநீர் நிலையங்கள் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து பதநீரைப் பொது மக்கள் பெரிதும் பருகுகின்றனர் என்பதை அறியலாம்.

ஆண்டு	வழங்கப் பட்ட பர்மிட்டுகள்	விற்பனை செய்யப்பட்ட பதநீரின் அளவு (லிட்டர்)	கிரயம் ரூ.
1961—62	5,720	25,00,978	2,77,877
1962—63	6,491	32,23,169	3,60,622
1963—64	7,604	52,65,805	5,85,089

பனைவெல்ல உற்பத்தியும், விற்பனையும்

இம்மாவட்டத்திலுள்ள 171 ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களில் 120 முதல் 130 சங்கங்கள் பனைவெல்ல உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. பெரும்பாலான உற்பத்திப் பொருள் அனைத்தும் ஆங்காங்கே உள்ள சந்தைகளில் தனித் தனியே விற்பனை செய்யப்படுகிறது. ஒரு சில சங்க உறுப்பினர்கள் தங்கள் உற்பத்திப் பொருளைக் கூட்டுறவு முறையில் விற்பனை செய்கின்றனர்.

பனைவெல்ல உற்பத்தி

ஆண்டு		உற்பத்தியில் ஈடுபட்ட சங்கங்களின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட பனையேற்று அனுமதிச் சீட்டுக்கள்	பதநீர் இறக்கப் பயன்படுத்தப் பட்ட பனைகள்	உற்பத்தி செய்யப்பட்ட பனைவெல்லத்தின் அளவு கிலோ	கிரயம் ரூ.
1960—61	...	172	8.169	4.08.450	35,79.401	12,72 676
1961—62	...	172	9.145	4.57.250	44,33.760	15,76.448
1962—63	...	172	8.746	4.37.300	40,86.571	14,52 932
1963—64	...	171	9.454	4.72 700	44,58.134	16,04.928

ஊழிபெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு—ஆழி எனப் படுவார்

பனைவெல்ல விற்பனை

ஆண்டு		விற்பனை அளவு (லிட்டர்)	விற்கிரயம் ரூ.
1960—61	...	35,79,401	22,23,886
1961—62	...	44,33,760	24,29,637
1962—63	...	40,86,371	21,79,398
1963—64	...	44,58,134	26,74,880

கிட்டங்கிகள்

உற்பத்தி செய்யப்பட்ட பனைவெல்லத்தைச் சேமித்து வைத்து நல்ல விலைக்கு விற்கும் பொருட்டு மாவட்ட சம்மேளனத்திற்கு 1959–60-ம் ஆண்டுப் பனைவெல்ல அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 3 கிட்டங்கிகளும் 1961–62-ம் ஆண்டுத் திட்டத்தின் கீழ் 2 கிட்டங்கிகளும் கட்ட நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் கீழே காண்க.

புல் செதுக்கும் ஆடுகள்!

ஹாம்பர்க் (டாட்)—இங்குள்ள ஒரு வீட்டின் சொந்தக்காரர் தனது லாயத்தின்மீது புல்வெளி ஒன்றை அமைத்திருந்தார். அதை அழகாக செதுக்கி ஒழுங்குபடுத்த ஆள் கிடைக்கவில்லை. இரண்டு ஆடுகளை வாங்கி அங்கு மேயவிட்டார். இயந்திரம் செதுக்குவது போல அந்த ஆடுகள் புல்லைச் செதுக்கி மேய்ந்து விட்டன. அப்பகுதியில் ஆடுகளே கிடையாது. ஆகவே இவைகளைப் பார்க்க அந்தப் பிரதேசக் குழந்தைகள் இங்கு கூடிவிடுகின்றன. புல் செதுக்கும் வேலையைச் செய்யும் இந்த ஆடுகள் கொழு கொழுவென்று வளர்ந்திருக்கின்றன.

எந்த ஆண்டுத் திட்டத்தின் கீழ் கிட்டங்கி கட்ட நிதி வழங்கப்பட்டது		கிட்டங்கி கட்டுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இடம்	வழங்கப்பட்ட நிதியுதவி கடன் ரூ.	வழங்கப்பட்ட நிதியுதவி மானியம் ரூ.	சுருக்கக் குறிப்பு
1959—60	...	(1) சாயல்குடி (2) ஸ்ரீவில்லிபுத்தூர் (3) கீழக்கரை	20,000	20,000	(1) இடம் வாங்கப்பட்டுவிட்டது. (2) ,, (3) கன்னிராஜபுரத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.
1961—62	...	(1) உச்சிப்புளி (2) திண்டுக்கல்	24,000	6,000	இடம் வாங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

சிவந்திப்பட்டி, கன்னிராஜபுரம் ஆகிய சங்கங்கள் 1962–63, 1963–64-ம் ஆண்டுத் திட்டப்படி கிட்டங்கி கட்டிக்கொள்ள நிதியுதவி அளிக்கும்படி விண்ணப்பித்துளளன.

பனை வளர்ப்புத் திட்டம்

பனை வளர்ப்புத் திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு சாயல்குடி ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவு சங்கத்தார் 3 ஏக்கர் 60 சென்ட் நிலம் வாங்கியுள்ளனர். இத்திட்டத்திற்காக ரூ. 4,145 மானியமாகவும், ரூ. 2,000 கடனாகவும் நிதி வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. 1,500 பனைமரங்கள் வளர்க்க ஏற்பாடு செய்து, தற்போது கிணறு தோண்டும் வேலை துரிதமாக நடந்து வருகிறது.

குடியிருப்பு

குடியிருப்புக்கள் கட்டுவதற்காக மாநில பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம் 1962–63-ம் ஆண்டுத் திட்டப்படி ரூ. 7,500

மானியமாகவும், ரூ. 20,000 கடனாகவும் வழங்க முடிவு செய்துள்ளது. இந்நிதி விரைவில் மாவட்ட சம்மேளனத்திடம் திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு ஒப்படைக்கப்படும். இக் குடியிருப்புக்களை நிர்மாணிக்க சாயல்குடி சங்கத்தார் தகுந்த இடத்தைத் தேர்ந்தெடுத்துள்ளனர்.

இதர உதவிகள்

மரத்திலிருந்து தவறி விழுந்து ஊனமடைவோருக்கும், உயிரிழப்போரின் குடும்பத்திற்கும் மாநில சம்மேளனம் நிதியுதவி வழங்கி வருகிறது. 1963–64-ம் ஆண்டு மூன்று வல்லுநர்கள் ரூ. 600 உதவித் தொகை பெற்றுள்ளனர்.

ஹரிஜன பனைத் தொழிலாளர்களிடமிருந்து பனைத் தொழில் கருவிகள் வாங்க ரூ. 18,480 பெறுமான நிதியுதவி வழங்கும்படி கோரிவந்த விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனைக்கும், அங்கீகாரத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

முடிவுரை

இம்மாவட்டத்தில் பனைத் தொழில் வளர்ச்சிப் பணிகள் ஆக்கம் பெற வேண்டுமாயின் எல்லா ஆரம்பச் சங்கங்களும் ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும். கிடைத்தற்கரிய நல்வாய்ப்பைப் பயன்படுத்தி உயர்வடைய தளராது பாடுபட வேண்டும். போட்டியோ, பூசலோ இன்றிப் பாடுபட்டால் விரைவில் நல்ல முன்னேற்றத்தைக் காணலாம்.

தயாராகிவிட்டது!

வார முறையால் இடர்படுவோருக்கு மாற்று முறையாக கன்னியாகுமரி மாவட்டம் பரக்குன்னு ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் மறைதிரு. T. ஜேம்ஸ் அவர்கள் மேற்கொண்டுள்ள 'பனை ஓத்தி முறை' பல செயல் விளக்கங்களோடு நூலாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூல், ஒவ்வொரு பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கமும் வாங்கிப் பயனடைய வேண்டிய அரிய கருவூலமாகும்.

பரக்குன்னு பனை ஓத்தித் திட்டம்

விலை: *30* காசு (தபால் செலவு தனி)

★

கிடைக்குமிடம்:

சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம்

66, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-17

தந்தி: 'பதநீர்' போன்: 42755



போஸ்ட் ஆபீஸ் ஸேவிங்ஸ் பாங்க்

உங்கள் வீட்டு வாசலிலேயே உள்ள ஒரு பாங்க்

- பரிபூரண நம்பிக்கையை அளிக்கிறது
- விரும்பும்போது பணத்தை டெபாஸிட் செய்யலாம்
- தேவைப்படும்போது பணத்தை எடுத்துக்கொள்ளலாம்
- ஆண்டுக்கு வரி இல்லாத 3 சதவீத வட்டியைப் பெறலாம்

DA 84/69

தேசீய சேமிப்பு நிறுவனம்

வரலாறு காணாத மாவட்டக் கருத்தரங்கு

(24—5—'64)

(காலை நிகழ்ச்சி)

இராமநாதபுரம் மாவட்டப் பனைத் தொழில் வல்லுநர்களின் கருத்தரங்கு 24, 25—5—'64 தேதிகளில் குன்றக்குடியில் நடைபெற்றது. 24—5—'64 காலை 10-30 மணிக்கு கீழாயப் பட்டி ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. பெரியாமலை நாடார் கொடியேற்றிவைக்க மாநாட்டு நிகழ்ச்சிகள் துவங்கின.

புகழ்படைத்த தமிழ் எழுத்தாளர் திரு. எஸ். ஏ. ரஹீம் அவர்கள் பொருட்காட்சியைத் திறந்துவைத்து உரையாற்றுகையில் ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் வலுப் பெற்று, எவருடைய உதவியுமின்றித் தாமாகவே இயங்கும் நிலையை அடைய வேண்டும் என்றும், இதற்காக மக்களின் மகத்தான சக்தி கூட்டுறவு அடிப்படையில் ஒன்று திரள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். கருத்தரங்கைத துவக்கிவைத்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் பேசுகையில் இலங்கையில் பனையைத் தேசிய மரமாக ஆக்கி, பால் பெருவிழா போல பதநீர் பெருவிழா நடத்துகின்றனர் என்றும், செல்வம் கொழிக்கும் பனையைத் தக்கவழியில் பயன் படுத்தி நாட்டுவளத்தைப் பெருக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். கருத்தரங்கிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றுப் பேசிய முதுகுளத்தூர் ஊராட்சி மன்ற ஒன்றியத் தலைவர் (Chairman, Muthukulathur Panchayat Union) திரு. ஹாசன் அவர்கள், குவியல் முறையைப் பரவலாக்கி வரும் இந்நேரத்தில் பனைத்தொழில் நுணுக்கங் களைப் பட்டி தொட்டி எங்கும் பரப்பி இத் தொழிலுக்கு ஆக்கத்தை உண்டாக்கப் பாடு படவேண்டும் என பனைத் தொழில் நுணுக்க ஊழியர்கள் அனைவரையும் கேட்டுக்கொண்டு பனைத் தொழில் விரிவு அதிகாரி ஒருவரை ஒவ் வொரு ஊராட்சி மன்றங்களின் ஒன்றியத்திலும் (Panchayat Union) நியமிக்க வேண்டுமென அரசினருக்கு வேண்டுகோள் விடுத்தார். அவர் பேசியதன் முழு விவரம் வருமாறு:—

*   *   *

வரவேற்புரை

திரு. ஹாசன்,

(தலைவர், முதுகுளத்தூர் பஞ்சாயத்து யூனியன்)

பனையின் எந்தப் பாகமும் வீண்போவ தில்லை. அது தன்னுடைய உறுப்புக்களால் உலகை வாழவைக்கிறது. உணவுப் பொருளும் தருகின்ற கறபகத் தருவை இப்பகுதி மக்கள் பெரிதும் நம்பி வாழ்கின்றனர். எனினும் பனையை முழு அளவும் பயன்படுத்தவில்லை. இதைப் பார்த்தால் "வலிய வரும் சீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளுவதுபோல்" இருக் கிறது. பனையின் பயன்களை உணராது இருப்பதே இதற்குக் காரணம். பனையை எந்த அளவு பயன்படுத்தலாம் என்பதை இங்குள்ள பொருட்காட்சியில் காணலாம். எந்தெந்த வழிகளிலெல்லாம் கிராமப் பொருளாதாரத்தை உயர்த்த முடியுமோ அவைகளை எல்லாம் பின் பற்ற வேண்டும். இத்தொழிலுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்துவரும் தலைவர் திரு. வே. வ. இராமசாமி அவர்கள் இதன் வளர்ச்சியில் தமது தனிக் கவனத்தைச் செலுத்தி, தன்னலமின்றி உழைத்து வருகிறார்கள். அவர்களை வரவேற்கிறேன்.

கிராமப் பொருளாதார வளத்தை உருவாக்க குவியல் முறைகளைப் பரவலாக்கி வருகிறோம். கிராமக் கைத்தொழில்களை ஊக்குவித்து வருகிறோம். என்றாலும்கூட கிராம மக்களிடம் போய்க்கேட்டால் இது பற்றி எதுவும் தெரியவில்லை. இதற்குக் காரணம் என்ன? நாம் பிரசாரம் செய்வதில்லை; கிராமம் கிராமமாகச் சென்று நல்லனவற்றை எடுத்துக் கூறுவதில்லை. பட்டிதொட்டி எங்கும் பனையின் முழு உபயோகமும் தெரியும்படி செய்வது உங்கள் (பிரதிநிதிகள்) பொறுப்பாகும். இவ்வளவு பெரிய படை இருந்தும் பயனில்லை! இனியாவது ஊக்கமுடன் பாடுபட்டு கிராம வளத்தைப் பெருக்குங்கள். நேற்று ஒரு கூட்டத்தில் தவத்திரு. அடிகளார் பேசுகையில் ஒரு பனையிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ. 70 பெறுமான பொருட்கள் கிடைக்கின்றன என்றார். இந்தச் செல்வத்தை நாம் வீணாக்காது பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இத்தொழில் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் உழைக்கும் திரு. வே. வ. இராமசாமி அவர்களையும், தன் வாழ்நாளைக் கிராம மறுமலர்ச்சிப் பணியில் ஈடுபடுத்தி, தன்னையே அர்ப்பணித்துள்ள திரு. ரா. குருசாமி அவர்களையும், பிரதிநிதிகளையும் மனமுவந்து வரவேற்கிறேன், வணக்கம்.

* * *

தலைமையுரை

திரு. ரா. குருசாமி

(காந்தி நிகேதன் ஆசிரமக் காரியதரிசி)

தலைமைவகித்துப் பேசிய காந்திநிகேதன் ஆசிரமக் காரியதரிசி திரு. ரா. குருசாமி அவர்கள், பனையிலிருந்து எவ்வளவு தொழில் செய்யலாம் என்பதைக் கண்காட்சியில் பார்த்து, அதில் எதை மேற்கொள்ள முடியுமோ அதைப் பருவமற்ற காலத் தொழிலாக மேற்கொள்ளலாம் என்றும், தற்கால நாகரிக மோகத்திற்கும், மக்களின் தேவைக்கும், திருப்திக்கும் ஏற்ற அளவில் அவைகளை உற்பத்தி செய்யவேண்டும் என்றும் குறிப்பிட்டார். இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திரு. திருவேங்கடப்ப நாயக்கர் அவர்கள் பேசுகையில் மதுவிலக்கால் பாதிக்கப்பட்ட பனைத் தொழில் வல்லுநர்களுக்குத் தமது கூட்டுறவு வங்கியின் மூலம் நபர் பொறுப்பின் பேரில் ரூ. 200 கடன் கொடுப்பதாகவும், இந்த அளவுக்கு எந்த வியாபாரியாலும் முன்பணம் கொடுக்க முடியாது என்றும் தெரிவித்தார். அடுத்துப் பேசிய சிங்கமபுணரி ஊராட்சி மன்றங்களின் ஒருங்கிணைப்புத் தலைவர் திரு வால்மீகி பேசுகையில் பனைத் தொழில் வளர்ச்சிக்கெனத் தனி இலாகா ஒன்று இருக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். மேலும் பேசுகையில் கூட்டுறவுப் பண்டசாலைகளில் கண்டிப்பாகப் பனைப் பொருட்களை வாங்கி விற்பனை செய்ய வேண்டும் என அரசினர் உத்தரவிடவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

* * *

திரு. வே வ. இராமசாமி

(தலைவர், மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம்)

பிற்பகல் நிகழ்ச்சிக்கு மாநில பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத் தலைவர் திரு. வே. வ. இராமசாமி அவர்கள் தலைமை வகித்தார்கள். கருத்தரங்கிற்கு வருகை தந்த அனைவரையும், மாநில சம்மேளன நிர்வாகக் குழு உறுப்பினர் திரு. தர்மக்கண் நாடார் வரவேற்றுப் பேசுகையில் தஞ்சாவூரில் பண்ணையாள் சட்டத்தின் மூலம் விவசாயிகளின் உரிமைகள் காப்பாற்றப்பட்டதுபோல் நாடெங்கும் பரவியுள்ள நிலமற்ற, வீடற்ற, சொந்தப்

பனைமரங்களற்ற பனைத் தொழிலாளர்களின் வாழ்க்கையைச் செவ்வைபடுத்தும் வகையில் ஒரு சட்டம் நிறைவேற்ற வேண்டும் என தமிழக அரசினரைக் கேட்டுக்கொண்டார்கள்.

தவத்திரு. குன்றகுடி அடிகளார்

கருத்தரங்கைத் துவக்கிவைத்த தவத்திரு. குன்றக்குடி அடிகளார் பேசுகையில் "ஊருக்கு ஊர் தேனீர் விடுதிகள் பெருகி வருகின்றன; இது நல்லதல்ல, முன்னோர்கள் கேழ்வரகு போன்ற சத்துணவை உண்டனர். பதநீர், பனைவெல்லம் போன்ற சத்துணவை உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்" எனக் குறிப்பிட்டார்கள். அடுத்துப்பேசிய மாநில கதர்—கிராமக் கைத் தொழில் கழகக் காரியதரிசி திரு. வெ. பத்மநாபன் அவர்கள், ஆரம்பச் சங்கங்களுக்கும், மாவட்ட சம்மேளனங்களுக்கும் உள்ள உறவையும், தொடர்பையும் பிரதிநிதிகள் பேசி முடிவு செய்துகொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்கள்.

நவீன முறையில் பதநீர் விற்பனை நிலையம் நடத்திய அருப்புக்கோட்டை, பரமக்குடி, மங்காபுரம் ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பதநீர் குளிர்விக்கும் பெட்டிகள் தனித்தனியே பரிசாக வழங்கப்பட்டன. பரிசு வழங்கிய மாநில சம்மேளனத் துணைத் தலைவர் திரு. கே. இராமலிங்கம் பேசுகையில் மரப் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் பனைத் தொழில் வல்லுநர்கள் என்றைக்கும் அடிமைகள்தான்; பரதேசிகள்தான் எனக் குறிப்பிட்டு பனைமரங்களைப் பனையேறுவோரின் உடைமையாக்க வேண்டுமென அரசினரை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்.

கோட்டாட்சித் தலைவர் (Revenue Divisional Officer) திரு. கானா அவர்கள் பேசுகையில் தமது அதிகார வரம்பிற்கு உட்பட்ட பனைமரங்களைக் குத்தகைக்குக் கேட்டால் தரத் தயாராக இருப்பதாக ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தெரிவித்தார்கள். மேலும் பேசுகையில் செங்கல சூளைக்காகவும், காளவாசலுக்காகவும் பிஞ்சு மரங்களை வெட்டுவதைப் பார்த்தால் பனைத் தொழிலுக்கே ஆபத்து வந்துவிடுமோ என அஞ்சவேண்டியுள்ளதென வருத்தத்துடன் கூறினார்.

இறுதியில் தேசியகீதம் பாடப் பகல் நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

இரவு

இரவு 9 மணிக்கு இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சியும, குமாரி விஜயாவின் நடன விருந்தும் நடைபெற்றது. மதுரை நடராசன் குழுவினர் பின்னணி இசைத்தனர். நடனமும், இசையும் பிரதிநிதிகளை உற்சாகம் ஊட்டின. திருமதி நளாயினிதேவி இசைக் குழுவினருக்குப் பரிசு வழங்கினார். அதன் பின்னர் பனைவெல்லம் (Sweet Gold), சங்கநாதம், குடும்ப நலம் முதலிய திரைபபடங்கள் காட்டப்பட்டன.

இலங்கையில் தேசிய மரம், பனை!

குன்றக்குடி அடிகளார் தகவல்

காரைக்குடி அருகேயுள்ள குன்றக்குடியில் 24, 25—5—1964 தேதிகளில் நடைபெற்ற இராமநாதபுரம் மாவட்டப் பனைத் தொழிலாளர்கள் கருத்தரங்கைத் துவக்கிவைத்துப் பேசிய தவத்திரு. குன்றக்குடி அடிகளார், தாம் இலங்கை சென்றபோது அங்கு 'பனை மரம்' தேசிய மரமாகப் (National tree) போற்றப்படுவதைக் கண்டதாகத் தெரிவித்தார். இதற்காக ஆண்டுதோறும் விழா நடத்திப் பதநீர் வழங்குவதாகவும் குறிப்பிட்டார். இதைப்போல் நம் நாட்டிலும் பனைமரங்களைப் பேணிக் காக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

பிரதிநிதிகள் கருத்து

கருத்தரங்கில் கொண்டுவரப்பட வேண்டிய தீர்மானங்கள் பற்றிய ஆலோசனைக் கூட்டம் ஒன்றை 24 - 5 —'64 காலை 8-30 மணிக்கு மாநில சம்மேளனக் காரியதரிசி அவர்கள் நடத்தினார்கள். நூற்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். தாலுகா வாரியாகப் பிரச்சினைகள் பற்றி விவாதிக்கப்பட்டது.

திருவாடானை

1. பனைத் தொழில் செய்யாத ஏனையோர் ஆரம்பச் சங்கங்களில் பஞ்சாயத்தார்களாக இருப்பதால், தொழில்புரிவோருக்கு வேண்டிய வசதிகள் கிடைக்க நடவடிக்கை எடுப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை.

2. அரசாங்கத்திற்குச் சொந்தமான பனைகளை பஞ்சாயத்துக்கள் மூலமாகப் பெறுவதில் மிகுந்த சிரமம் உள்ளது. பனை மரத்தை அனுபவிக்கும் உரிமையை அரசினர் ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்ற வேண்டும்.

3. விறகு கிடைக்காததால் உற்பத்தியாகும் பதநீரை வெல்லமாக்க முடிவதில்லை. எனவே பதநீர் விற்பனை நிலையங்கள் திறப்பதற்கு நிதியுதவி அளிக்கவேண்டும்.

இவ்விவாதத்தில் காவாக்கோட்டை, காடாங்குடி, ஆதியூர், ஆனந்தூர், அரசத்தூர் ஆகிய கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

பரமக்குடி

இத்தாலுகாவைச் சேர்ந்த பதின்மூன்று சங்கங்களின் சார்பாக பிரச்சினைகள் எடுத்துக் கூறப்பட்டன. பரமக்குடி தாலுகாவில் பரமக்குடி, கொம்படிமதுரை, வழக்காணி, மேலத்துறையூர், சேம்பார், தருதலை, அரணையூர், கருஞ்சுத்தி, குண்டுக்குளம், ஓச்சந்தட்டு, அரசடிவண்டல், அல்லிவயல், பீக்குளம், அண்டக்குடி முதலிய இடங்களில் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

இத்தாலுகாவில் பத்துச் சங்கங்கள் பனைவெல்ல உற்பத்தி செய்து, அதைத் தனித் தனியே விற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. பரமக்குடி சங்கத்தில் பனைத்தொழில் நுணுக்கர் ஒருவரை நியமித்து, நவீன முறைகளைக் கற்றுக் கொடுப்பதோடு கூட்டுறவு வாணிபத்தைப் பெருக்க வழி வகை செய்யவும் ஏற்பாடு செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

(1) விற்பனை வசதி.

(2) தொழில் நுணுக்க ஆலோசனை.

(3) கிட்டங்கி வசதி.

(4) குடியிருப்பு வசதி முதலியனவற்றைச் செய்து கொடுக்க வேண்டுமெனப் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டனர்.

இராமநாதபுரம்

இராமநாதபுரம் தாலுகாவில் கீழ்க்கண்ட எட்டுச் சங்கங்கள் உள்ளன.

(1) கீழக்கரை ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

(2) காரணை ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

(3) கோரவல்லி ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

(4) ரெட்டையூரணி ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

(5) நத்தைக்குளம் ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

(6) தாமரைக்குளம் ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

(7) செங்கழனியூர்ஓடை ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

(8) தேவிபட்டணம் ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

ரெட்டையூரணியிலும், அதன் அருகாமையிலும் உள்ள சங்கங்களைத் தும்பு, ஈர்க்கு உற்பத்தியில் ஈடுபடுத்தலாம் என்ற ஆலோசனை தெரிவிக்கப்பட்டது. ரெகுநாதபுரம், உச்சுப்புளி, வாலாந்தரவை முதலிய இடங்களில் தனிப்பட்ட முதலாளிகளின் ஆதிக்கத்தின் கீழ் இப்பனந்தும்பு வியாபாரம் இருப்பதால் மேற்கண்ட இடங்களில் பனந்தும்பு சேகரிப்பு நிலையங்களை ஏற்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொண்டனர். இதுபற்றி மாநில சம்மேளனக் காரியதரிசி அவர்கள் பேசுகையில் சம்மேளன வணிகத்துறை நிர்வாகி (*Bussiness Manager*) திரு. எட்வர்டு அவர்களை அனுப்பிவைத்து சாதகபாதகங்களை ஆராய்வதாகவும், அவர் கொடுக்கும் முடிவின்பேரில் மத்தியான ஒரு இடத்தில் தும்பு நிலையம் நடத்துவது பற்றி சம்மேளன நிர்வாகக் குழுவினர் பார்வைக்கு சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்தார்.

ரெட்டையூரணி பஞ்சாயத்தில் வண்டிப் பாதையோரமுள்ள தனியார் பட்டாப் பனைகளை வெட்டுவதாக தெரிவிக்கப்பட்டது. இதுபற்றி மாநில பனைவெல்ல நிர்மாணிகர் திரு. வி. கதிர்வேலு பேசுகையில். வளர்ந்து வரும் சமுதாய அபிவிருத்தியில் நமக்குள்ள பங்கை உணர்ந்து, ஊரின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக உள்ள சாலை அமைப்பு, மின்சார வசதி முதலியவற்றுக்காக சில பனைகள் வெட்டப்படுவதால் தொழிலைப் பெரிதும் பாதிக்காது. இதற்கு கொஞ்சம் விட்டுக் கொடுப்பதில் தவறில்லை எனக் குறிப்பிட்டார். சேது சமுத்திரத் திட்ட வேலைகள் துவங்கும் போது அப்பகுதியில் லட்சக்கணக்கான மரங்கள் வெட்டப்பட வேண்டியதிருக்கும் என்றும், இதற்காக மேற்படித் திட்டம் வேண்டாம் என்று சொல்லிவிடுவதா என்றும் கேட்டார்.

சங்க விதிகளில் கடன் வாங்கும் உச்ச அளவு திருத்தப்படாததால் பனைத் தொழிலுக்கு வேண்டிய அளவு கடன் வாங்க முடியவில்லை என்று எல்லாப் பிரதிநிதிகளும் குறை கூறினர்.

அடிகளார் செய்த தவறுக்கு நன்றி!

★★★
★

தவத்திரு. குன்றக்குடி அடிகளார் இராமநாதபுரம் மாவட்டப் பனைத் தொழிலாளர் கருத்தரங்கைத் துவக்கி வைத்துப் பேசுகையில், ஆசிரியைப் பயிற்சிப் பள்ளியை நிர்மாணிக்கும்போது தாம் ஏராளமான பனைகளை உத்திரங்களுக்காக வெட்டியதை இப்போது தவறு என உணர்வதாகக் குறிப்பிட்டார். இனி ஒருபோதும் பனைகளை வெட்டச் சம்மதிக்கப் போவதில்லை என்றும் தெரிவித்தார். ஒரு பனை ஆண்டுக்கு ரூ. 70 பெறுமான பொருட்களைத் தரும்போது அதை வெட்டி தேசிய செல்வத்தை வீணுக்கக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டார்.

[அடிகளார் வெட்டிய பனை உத்திரங்கள் பள்ளிக்கு கொட்டகையாய் அமைந்தன. அதே பனை மரத்தாலான கொட்டகை பொருட்காட்சியில் பனை இறந்த பின்னும் உதவும் என்பதை எடுததுக் காட்டியது. அடிகளார் செய்த தவறுக்கு நன்றி—ஆசிரியர்.]

ஓய்வு நேர வேலை தருவது ஓலைத் தொழிலே!

அருப்புக்கோட்டை

திருச்சுழி, பெருநாழி, யானைக்குளம், காரியாபட்டி முதலிய இடங்களில் பனை வெல்லம் செய்வதில் அனுபவம் இல்லாததால் பதநீர் விற்பனையை ஊக்குவிக்கவேண்டும் என்றும், பதநீர் கேன்கள் வாங்கவும், விற்பனை நிலையத் தளவாடங்கள் வாங்கவும் பண உதவி செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

பாளையப்பட்டி பஞ்சாயத்துப் பனைகளைத் தனியாருக்குக் குத்தகைக்கு விடுவதால் அருப்புக்கோட்டை நகரில் உள்ள பனைகளைக் குத்தகைக்கு எடுத்து அருப்புக்கோட்டையில் பதநீர் நிலையம் நடத்துவதாகத் தெரிவிக்கப் பட்டது.

அருப்புக்கோட்டையிலுள்ள சுமார் 70 பனைத் தொழில் வல்லுநர்கள் நில வாடகை அல்லது வீட்டு வாடகை கொடுத்துக் குடியிருக்கும் பகுதி வழியாகப் புது புகை வண்டிப் பாதை நிர்மாணிக்கப் போவதால் மேற்படி 70 குடும்பத்தினரையும் வெளியேறும்படி கட்டாயப்படுத்துவதாகப் பிரதிநிதிகள் தெரிவித்தனர். முன்பு ரூ. 300-க்கு விற்ற வீட்டு மனை இப்போது ரூ. 1,000 ஆக உயர்ந்து விட்டதால் ஏழைப் பனைத் தொழில் வல்லுநர்கள் வீடு கட்ட வழியின்றித் தவிப்பதால் குடியிருப்புத் திட்டத்தை அருப்புக்கோட்டையில் செயல்படுத்தும்படி அவ்வூர்ப் பிரதிநிதி கேட்டுக் கொண்டார்.

அருப்புக்கோட்டையில் பனைவெல்லக் கொள்முதல் நிலையம் ஒன்றை மாவட்ட சம்மேளனம் ஏற்படுத்தவேண்டும் என்றும் ஆலோசனை கூறப்பட்டது.

முதுகுளத்தூர்

நரிப்பையூர் அருகிலுள்ள அரசாங்கக் காட்டில் உள்ள பனைகளை மாவட்ட சம்மேளனம் குத்தகைக்கு எடுத்து, அருகாமையிலுள்ள ஆரம்பச் சங்கங்களுக்குப் பிரித்துக் கொடுக்கலாம் என்று ஆலோசனை கூறினர். முதுகுளத்தூர் தாலூகாவிலுள்ள கீழ்க்கண்ட சங்கப் பிரதிநிதிகள் மேற்கண்ட காட்டிலுள்ள *(Sayalkudi Forest)* பனைகளைக் குத்தகைக்கு எடுக்க இதுகாறும் செய்யப்பட்ட முயற்சிகளைப் பற்றிக் குறிப்பிட்டனர்.

(1) சாயல்குடி ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

(2) மூக்கையூர் ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

(3) நரிப்பையூர் ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

(4) கன்னிராஜபுரம் ஆரம்பப் பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

(5) சிறுதலை ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

(6) ஏர்வாடி ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

பனைவெல்லம் கொள்முதல் செய்ய உடனடியாக நிதி வழங்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர்

இத்தாலூகாவின் சார்பில் கீழ்க்கண்ட சங்கப பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

(1) மம்சாபுரம் ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

(2) சிவந்திப்பட்டி ஆரம்பப் பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

(3) மங்காபுரம் ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

(4) கம்மாபட்டி ஆரம்பப் பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

(5) பெருமாள்பட்டி ஆரம்பப் பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

(6) ஆராய்ச்சிபட்டி ஆரம்பப் பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

(7) புத்தூர் ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கம்.

அடிக்கடி கூட்டுறவுச் சங்கங்களின் முது ஆய்வாளரை *(Senior Inspectors of Co-operative Societies)* மாற்றுவதால் சங்கஙகளின் நிர்வாகத்தில் சிக்கல் ஏற்படுவதால் அடிக்கடி மாற்றுவதைத் தவிர்ப்பது நல்லது என ஆலோசனை கூறப்பட்டது. இத்தாலூகாவில் வார முறையும், பணக்குத்தகை முறையும் மேற்கொள்ளப்படுவதால் பனைத் தொழிலாளியின் வருமானத்தில் பெரும் பகுதி பனைச் சொந்தக்காரருக்குப் போய்ச் சேர்ந்து விடுவதாகத் தெரிவிக்கப்பட்டது. பெருமாள்பட்டியில் ஒரு பனந்தும்பு நிலையம் ஏற்படுத்தவேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில் மாநில சம்மேளன நிர்வாகக் குழு உறுப்பினர்கள் திரு. வி. பி. ஆர். சிதம்பரம், திரு தர்மக்கண் நாடார் ஆகியோரும், இராமநாதபுரம் மாவட்ட கிராமக் கைத்தொழில் அலுவலக கூட்டுறவு உப-பதிவாளர் திரு. பாலகிருஷ்ணன் அவர்களும், வேறு சில முக்கிய பார்வையாளர்களும கலந்து கொண்டனர்.

மாநில சம்மேளன வணிகத் துறை நிர்வாகியை பிரதிநிதிகளுக்கு சம்மேளனக் காரியதரிசி அறிமுகம் செய்து வைத்து அவருடன் ஒத்துழைக்கும்படிக் கேட்டுக்கொண்டார்.

தலைவர்களின் கருத்துரை

(25—5—1964)

அருப்புக்கோட்டை நகர பதநீர் நிலைய விற்பனையாளர் பேசுகையில், "ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவுமா?" என்பதுபோல திட்டங்கள் மட்டும் வகுத்து விட்டால் பனைத் தொழிலாளரின் நிலை உயர்ந்து விடுமா எனக் கேட்டார். வகுக்கப்பட்ட திட்டங்கள் காலா காலத்தில் அதன் நோக்கம் நிறைவேறும்படி செயல்படுத்தப்படுவதில் நிர்வாகத் துறையினர் தனிக் கவனம் செலுத்தவேண்டும் என்றும், திட்டங்களை விருதாவாக்கும் நிலையில் ஆரம்பச் சங்கங்களுக்குள்ளேயே இருக்கும் கோஷ்டி பூசல்களை ஒழித்துக் கட்டவேண்டும் என்றும் குறிப்பிட்டார். நன்ருகப் பணிபுரியும் பனைத் தொழில் நுணுக்க ஊழியர்களையும், கூட்டுறவு முதுநிலை ஆய்வாளர்களையும் அடிக்கடி மாற்றக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டார்.

திரு. ரா. குருசாமி அவர்கள், காந்தி நிகேதன் ஆசிரமம்

தீர்மானங்களின் மீது பேசுகையில் தே. கல்லுப்பட்டி காந்தி நிகேதன் ஆசிரமக் காரியதரிசி திரு. ரா. குருசாமி அவர்கள் எல்லாப் பனைத் தொழில் வல்லுநர்களும் ஆடு, கோழி முதலியன வளர்க்கவேண்டும் என்றும், ராட்டையால் நூல் நூற்கக் கற்று கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். உணவுக்கு வேண்டிய மாமிசம், முட்டை முதலியனவற்றைப் பெறுவதோடு எஞ்சியதை விற்றுத் தானியம் வாங்கிக் கொள்ளலாம் என்றும் ஆலோசனை கூறினர். நூல் நூற்கக் கற்றுக் கொண்டால் உடைத் தேவையை மிக எளிதில் நிறைவு செய்துகொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

திரு. வி. கதிர்வேலு, மாநில பனைவெல்ல நிர்மாணிகர்

செப்புக் கொப்பரைகள் உப்பங் காற்ருல் கெடாது; நீண்ட நாட்கள் உழைக்கும். எனவே கடற்கரையோரப் பகுதிகளிலுள்ள ஆரம்பச் சங்க உறுப்பினர்கள் சற்று விலை அதிகமானாலும் செப்புக் கொப்பரைகளைச் செய்து கொள்ளலாம். அடுத்தபடியாக சங்க உறுப்பினர்களுக்குத் தேவையான உணவுப் பண்டங்களை வாங்கி, எவ்வித இலாபமும் இன்றி உறுப்பினர்களுக்கு விநியோகிக்கலாம் என்று ஆலோசனை கூறினர்.

கன்னிராஜபுரம் பிரதிநிதி

தமது ஆசிரியத் தொழிலோடு பனைத் தொழில் வல்லுநர்களுக்கு தம்மாலியன்ற உதவிகளைச் செய்து வருவதாகவும், தம்மால் ஆரம்பிக்கப்பட்ட காராம் கிராம ஆரம்பச் சங்கத்தில் 37 உறுப்பினர்கள் இருப்பதாகவும் தெரிவித்தார். முத்துப்பேட்டை கிராமத்தில் கத்தோலிக்க சாமியாருக்குச் சொந்தமான நிலத்தில் குடியிருந்த 37 குடும்பங்களும் வெளியேற்றப்பட்டதால் வீடிழந்தனர் என்றும், அதற்காக தம்முடைய முயற்சியால் நிலம் வாங்கி 'சேதுநகர்' என்ற சிற்றூரைத் தாம் நிர்மாணித்திருப்பதாகத் தெரிவித்தார். இங்கு குடியிருப்புத் திட்டத்தை நிறைவேற்றினல் பேருதவியாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டார்.

திரு. தங்கசாமி, சாயல்குடி

ஒவ்வொரு ஆரம்பச் சங்கத்திலும் 'தனது கடை' நடத்தி உறுப்பினர்களுக்குத் தேவையான உணவுப் பண்டங்களை வாங்கிய விலைக்கே விநியோகிக்க அந்தந்தச் சங்கங்கள் ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும் என்ற ஆலோசனையைத் தெரிவித்தார். இதனுல் சங்கத்தின் மீது பற்றும், பிடிப்பும் ஏற்படுவதால் கூட்டுறவு வலுப்பெறும் என்றும், உணவுப் பொருளின் கிரயத்தைப் பனைவெல்லமாகவோ, இதர பனைப் பொருளாகவோ வசூலித்துக் கொள்ளுவதால் கூட்டுறவு வணிக முறை உறுதிப்படும் என்றும் குறிப்பிட்டார். இவ்வாலோசனையை அனைவரும் வரவேற்றனர்.

வல்லுநர் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும்

திரு. வி. பி. ஆர். சிதம்பரம்

ஒரு பனைத் தொழிலாளி குடும்பத்தின் ஒரு வருட சராசரி வருமானம்

உற்பத்தி கருப்புக்கட்டி 10 கிலோ சிப்பம் (100 to 200)... 150

		ரூ. ந.பை		ரூ. ந.பை	
சிப்பம் 1-க்கு விலை (6 ரூ. to 10)	...			8	00
மொத்தம் சராசரி கருப்புக்கட்டி வருமானம்	...			1,200	00
இதர அயிட்டம் (ஓலை, மட்டை & etc.) வருமானம்	...			100	00
பனை குத்தகை 80 to 100 பனைகள் (ரூ. 150 to 450)	...	300	00		
விறகு	...	150	00		
இதர அயிட்டம் (தளவாடம், சுண்ணும்பு) செலவு	...	100	00		
மொத்தம்	...	550	00	1,300	00

மொத்த வருமானம்	...	ரூ.	1,300	00
மொத்தச் செலவு	...	ரூ.	550	00
நீக்கி வருமானம்	...	ரூ.	750	00

மொத்தம் தொழில் செய்யும் மாதங்கள்	...	6
மொத்தம் தொழில் செய்யும் நபர்கள்	...	4

ஆண்	1	...	ரூ.	60	00
பெண்	1	...	ரூ.	35	00
சிறு பிள்ளைகள்	2	...	ரூ.	30	00
மொத்தம்		...	ரூ.	125	00

மாதம் 1-க்கு தொழில் காலத்தில் ஒரு குடும்பத்திற்கு சராசரி வருமானம் ரூ. 125—00. தொழில் செய்த ஆறு மாதங்கள் தவிர, மற்ற ஆறு மாதங்களிலும் தொழிலில்லாமலிருப்பதால், அவர்கள் தொழில் செய்த ஆறு மாதத்திலுள்ள மொத்த வருமானமும் 12 மாத வருமானமாகிறது. அதனுல் மாதம் 1-க்கு சராசரி வருமானம் ஒரு பனைத் தொழிலாளி குடும்பத்திற்கும் ரூ. 62—50 தான் கிடைக்கிறது.

பண்டைய நாளில் பனைமரக் கொடியும் பறந்தது!

தொழிலாளியின் நிலை :

ஒரு தொழிலாளி, வியாபாரியிடம் தொழிலில்லாத காலத்தில் மொத்தம் கடன் வாங்குவது ரூ. 200. இத்தொகைக்கு இரட்டிப்பான ரிக்கார்டுகள் முதலில் எழுதிக் கொடுத்துவிட்டு தொழில் துவங்கும் வரை, அத்தொகையில் வாரம் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் வியாபாரியிடம் வாங்கமுடியும். இதனல் தொழிலாளிகளுக்கு, அந்தந்த கிராமங்களிலுள்ள சிறு சிறு கடைகளில் தான் அவர்களுக்கு வேண்டிய பொருட்களை வாங்கமுடிகிறது. கிராமத்திலுள்ள சிறு கடைக்காரர்கள் ரூ. 1-க்கு 20 நபை வீதம் அதிக லாபம் வைத்து விற்பனை செய்கிருர்கள். ஒரு தொழிலாளி குடும்பத்திற்கு வருடம் 1-க்கு சராசரி செலவு ரூ. 750 ஆகிறது. இதனல் மட்டும் பாதிக்கப்படுவது ரூ. 150 தொழிலாளி, வியாபாரிக்குக் கொடுக்கும் கமிஷனும், வட்டியுமாக ரூ. 50 ஆகிறது.

ஒரு சீசனில் சித்திரை, வைகாசி மாதங்களில் மொத்த உற்பத்தியில் 45 சத வீதம் உற்பத்தியாகும். வியாபாரிகள் இந்த மாதங்களில் மற்ற மாதங்களில் விற்பனையாகும் கருப்புக்கட்டி விலையில் 10 கிலோ சிப்பம் 1-க்கு ரூ. 3-லிருந்து 5 வரை குறைத்து வாங்கிவிடுவார்கள். இந்த மாதங்களில உற்பத்தியாகும் அதிக கருப்புக்கட்டியை, தொழிலாளி தாங்கள் தொழில் செய்யுமிடமான தற்கால குடிசைகளில் சேமித்துவைக்க முடிவதில்லை. ஏனெனில் :—

(a) வியாபாரியிடம் கடன் வாங்கியிருப்பதால், அவர்கள் பாக்கிக்காக, கருப்புக்கட்டியை மேற்படி மாதங்களில் விற்பனையாகும் விலைக்கு அவர்களிடமே கொடுத்துவிட வேண்டிய நிர்ப்பந்தமேற்படுகிறது.

(b) இந்த மாதங்களில் மேல்காற்று துவங்கி விடுவதால், தீ விபத்து ஏற்படலாமென்ற பயமேற்படுகிறது.

(c) மேற்படி மாதங்களில் மழை வேறு பெய்துவிட்டால், குடிசை வசதியில்லாததினல் குளிர்ந்த காற்று பட்டவுடன் கருப்புக் கட்டி கசிந்து விடுமென்ற பயமும் உண்டாகிறது. இக்காரணங்களால் தங்கள் உற்பத்தி கருப்புக் கட்டியை மேற்படி மாதங்களில் வியாபாரியிடம் கண்டிப்பாக விற்பனை செய்யவேண்டிய சூழ்நிலை தொழிலாளிக்கு ஏற்பட்டு அதனல் ரூ. 200 வரை நஷ்டமுண்டாகிறது ஒரு தொழிலாளிக்கு மேற்கூறிய மொத்த நஷ்டங்கள் ரூ. 400 ஆகிறது. அதாவது தாங்கள் வாங்கும் மொத்தக் கடன் ரூ. 200:க்கும் ஒரு வருட வட்டி ரூ. 400 ஆகிறது. இந்த பயங்கரமான வட்டியை ஷை தொழிலாளிகளும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. இவர்கள் படிக்காதவர்கள்; ஆதலால் புரிய முடியவில்லை.

அமரர் நேரு மறைவுக்கு இரங்கல்

நவ பாரதச் சிற்பி திரு. ஜவாகர்லால் நேரு அவர்கள் 27—5—1964 இயற்கை யெய்தியதை முன்னிட்டு 29—5—'64 பிற்பகல் 5-30 மணிக்கு திரு. ஆர். சீனிவாசன், B A. அவர்கள் தலைமையில் மாநில சம்மேளன அலுவலகத்தில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. சம்மேளன ஊழியர்கள் அனைவரும் அமரர் நேரு பெருமகனரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அஞ்சலி செலுத்தினர். அரும்பெருந் தலைவரை இழந்த சோகத்தில் மூழ்கியிருக்கும் தாய்த் திருநாட்டை நேரு வழியில் காத்திட வேண்டும் என மாநில பனைவெல்ல நிர்மாணிகர் திரு. வி. கதிர்வேலு அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார். சம்மேளனக் காரியதரிசி அவர்கள் உருக்கமானதோர் உரை நிகழ்த்திஞர். அனுதாபம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேற்கூறிய நஷ்டங்களால் அவனுடைய வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. தொழிலும் ஆபத்தானது. மேலும் அவனுடைய உடம்பும் பாழாக்கப்படுவதுடன், அவன் மனித உலகில் அவமானச் சின்னமாகவும் கருதப்பட்டு வருகிறான்.

இத்தகைய காரணங்களால்தான், தொழில் செய்பவர்களில் வருடத்திற்கு 10 சத விகிதம் போல் குறைந்ததும், பின் வாரிசு களும் மற்றவர்களும் மேற்படி தொழிலில் ஈடு படுவதில்லை, அதனால் நாளுக்கு நாள் மேற்படி தொழிலும் குறைந்து வருகிறது.

வியாபாரிகளுக்குச் சாதகமான நிலை :

மனிதனுக்கு அத்யாவசியமான உணவுப் பொருளில், அரிசிக்கு அடுத்தது சக்கரை. இப்பொருள் அதிகம் செலவாகக் கூடிய நஞ்சை பூமியில் கரும்பை உற்பத்தி செய்தும் செலவு என்று நினைத்தும் பார்க்காத பூமி யிலுண்டாகும் பனை, தென்னை, ஈந்து போன்ற மரங்களிலிருந்தும் கிடைக்கிறது. நாளுக்கு நாள் மக்கள் அதிகமாக சக்கரையை உப யோகித்து வருகிறார்கள். நமக்கு தேவையான சக்கரையே, நம் நாட்டில் உற்பத்தி செய்யப் படாமலிருக்கும்போது, சர்க்கார் வெளிநாடு களுக்கும் சக்கரையை ஏற்றுமதி செய்கிறது. இதனால் கரும்பு சக்கரைக்கு அதிக விலை கிடைக்கிறது.

பனைத் தொழிலாளியும் நாளுக்கு நாள் தொழிலை விட்டு வருவதால் கருப்புக்கட்டி உற்பத்தி மிகவும் குறைந்து வருவதைக்கண்ட கரும்பு ஆலை முதலாளிகள் நஞ்சை பூமிக்கு அதிக கட்டுக் குத்தகை கொடுத்தும், மற்ற நஞ்சை உரிமையாளர்களும் நெல் உற்பத்திக் குப் பதிலாக கரும்பை உற்பத்தி செய்து அதிக லாபமடைந்து வருகிறார்கள். சர்க்காரும் கரும்பு ஆலை மீது அதிக கவனம் செலுத்தி பணம் உதவியும் செய்து வருகிறது.

நஞ்சை பூமியில் கரும்பு உற்பத்தி அதிக மாக்கப்பட்டு நெல் உற்பத்தி குறைவதால், மக்களுக்கு தேவையான அரிசி கிடைக் காமலும், அதன் விலையும் மார்க்கட்டில் அதிக மாக்கப்பட்டு வருகிறது. இதனால் மற்ற உற் பத்தி பொருட்களும் தானாகவேகூடி விடுகிறது இத்தகைய விலை ஏற்றத்தினால், நாட்டில் விலை வாசிப் போராட்டங்கள் அடிக்கடி தலைதூக்கு கின்றன. இந்தப் போராட்டங்களில் சர்க்கார் சிப்பந்திகளும், ஆலைத் தொழிலாளர்களும், நெல் சாகுபடியாளர்களும் மற்றவர்களைவிட சக்திவாய்ந்தவர்களாக யிருப்பதால், இவர் களால் கிளர்ச்சி அதிகமாக்கப்பட்டு, சர்க்கார் நிர்வாகத்தையும் பாதிக்கிறது. இவர்களுடைய போராட்டங்களுக்காக சர்க்காரும் பயந்து மேற்கூறியவர்களுக்காக சம்பளத்திலோ அல்லது பஞ்சப்படியிலோ உயர்த்த தக்க நடவடிக்கை உடனே எடுக்கிறது. மனித சமூகத்தில் இதுவரை எந்தவித போராட்டங் களிலும் ஈடுபடாத அப்பாவிகளான பனைத் தொழிலாளிகள் மட்டும் கவனிப்பாரற்று, அதிக மாக பாதிக்கப்படுவதால் வேறு தொழில் செய்ய முற்படுகிறார்கள். இந்நிலை இன்னும் நீடிக்குமானால், நாட்டில் பனைத்தொழில் நசித்துப் போவதுடன், சம்பள உயர்வு, பஞ்சப் படி போன்ற சிக்கல்கள் அடிக்கடி ஏற்பட்டு நிலையான நிர்வாகமும் சர்க்காரால் நடத்த முடியாமல், நாடும் முன்னேற்றம் காண முடியாது போகக்கூடும்.

நாடு நலம்பெற......

நாடு நலம் பெற, மக்கள் முன்னேற்றம் காண, சர்க்கார் உடனடியாக பனைத் தொழி லுக்கு அடியிற்கண்ட உதவிகள் செய்ய முன் வரவேண்டும்.

முதலாவது, சீசனில்லாத காலங்களில் பனைவெல்லக் கூட்டுறவு பிரதம சங்கங்கள் மூலம் தொழிலாளிகளுக்கு வேண்டிய பொருட் களை ரூ. 200 வரையிலும்; ரூ. 50 ரொக்கமும் கொடுத்து, சீசனில் கருப்புக்கட்டி நல்ல விலை வரும்போது அவர்களிடமிருந்து வசூல் செய்ய வேண்டும்.

கரும்பின் சர்க்கரையைவிட அதிக சக்தியுடையது பனஞ்சர்க்கரை!

இரண்டாவது, தொழிலாளியின் உற்பத்தி பொருளை தேக்கிவைக்கவும், சுகாதார வசதியுடன் குடியிருக்கவும் ரூ. 1000 செலவில் வீடு கட்டி கொடுக்கவேண்டும். இத்தொகையில் ரூ. 250 மானிபமும் மீதியை பத்து வருடத்திற்கு வட்டியில்லா கடனாகவும் கிடைக்க வழி செய்யவேண்டும்.

மூன்றாவது, இந்தியாவில் மொத்தம் பனை மரங்கள் சுமார் 5 கோடி. இதில் சுமார் 2 கோடி பனைகளிலிருந்துதான் கருப்புக்கட்டி உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இந்த 2 கோடி பனை மரங்களில் சுமார் ¼ கோடி சர்க்காருக்கும் ¼ கோடி பனைத் தொழில் செய்பவர்களுக்கு சொந்தமும், மீதி 1½ கோடியும் மற்ற முதலாளிகளுக்கு உரிமையாகவுமிருக்கிறது. தனியாரிடமுள்ள பனைகளில் பனை 1-க்கும், அதன் கீழ் நிலமும் சேர்ந்து ரூ. 10 முதல் 50 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனடிப்படையில் தனிப்பட்ட முதலாளிகளிடமுள்ள பனைகளும் அதன் கீழ் நிலமும் சேர்ந்து உத்தேச கிரய மதிப்பு ரூ. 50 கோடி ஆகிறது.

தனியாரிடமுள்ள பனைகள் விற்பனைக்கு வருவதையும், சர்க்கார் பனைகளையும் பனைத் தொழிலாளிக்கு கிரயத்திற்கு வாங்கிக் கொடுக்கவேண்டும். ஒவ்வொரு தொழிலாளியும் தங்கள் தங்கள் கிரைய தொகைகளுக்கு அந்தந்த பனைவெல்ல கூட்டுறவு பிரதம சங்கங்களுக்கும் 10 வருட அடமான ரிக்கார்டு (Mortgage) எழுதிக் கொடுத்துவிட்டு, பின் அந்த கடன் தொகையை வருடம் 1-க்கு 6 சதவீதம் வட்டியுடன் 10 வருடங்களில் செலுத்தி தங்கள் அடமான ரிக்கார்டை வாபஸ் பெற்றுக் கொள்ளவேண்டியது. இவ்வித ஏற்பாடுகளினால் தனியாரிடமுள்ள பனைகளின் கட்டுக் குத்தகை போட்டியில்லாமல் குறைவதுடன், தங்கள் பனைகளை தொழில் செய்யவேண்டிய ஆட்கள் கிடைக்காமல்போய் விடுமோ என்ற பயமுமேற்படும். இதனால் தங்கள் பனைகளை குறைந்த விலைக்கும் விற்பனை செய்ய முன் வந்துவிடுவார்கள். நாளடைவில் எல்லா பனைகளும் அதன் தொழிலாளிக்கு உரிமையாக்கப்பட்டுவிடும்போது அதன் கீழ் நிலத்தில் உற்பத்தியாகும் விறகுகள், தங்களுக்கு ஒரு வருடத்திற்கு வேண்டிய விறகில் பாதி கிடைக்கும். உற்பத்தியையும் பெருக்க முழு முயற்சி எடுப்பதுடன், சீசனில்லாத காலத்தில் மேற்படி நிலத்தில் மாற்று தொழில் செய்யவும் தொழிலாளிகள் முற்படுவார்கள். தொழிலாளிகள் பல வழிகளிலும் லாபம் காண முடிவதால் தங்கள் கிரைய கடனை இலகுவில் அடைக்க முடியும். அதனால் தங்கள் வாரிசுகளும், மற்றவர்களும் இத்தொழிலில் ஈடுபட ஆர்வத்துடன் முன்வர நேரிடும். மற்ற 3 கோடி பனைகளும் நாளடைவில் செயல்பட்டு கருப்புக் கட்டி உற்பத்தியும் அதிகமாக்கப்படும். இந்தியாவிலுள்ள மக்களுக்குத் தேவையான சக்கரை யாவும் இதன் மூலம் பூர்த்தி செய்து விடலாம். பனைத் தொழிலின் வளர்ச்சி அதிகரிக்க, அதிகரிக்க, கரும்பு உற்பத்தியையும் குறைக்க சர்க்கார் வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேற்கூறப்பட்ட திட்டப்படி பனைகளை தொழிலாளிக்கு உரிமை மாற்றம் செய்வதற்குண்டான தொகை ரூ. 50 கோடியையும் சர்க்கார் உடனடியாக மொத்தமாகவும், அல்லது வருடத்திற்கு ரூ. 5 கோடி வீதம் 10 வருடங்களிலாவது செய்ய முன்வந்தால், இவர்களுக்காக வருடா வருடம் சர்க்கார் கொடுத்து வரும் மானியங்களையும், சிறு சிறு கடன்களையும் கொண்டு இதுவரை இவர்கள் முன்னேற்றம் காணாதது, சீக்கிரத்தில் எல்லோரும் ஆச்சரியப்படக் கூடியளவில் இத்தொழிலின் வளர்ச்சி முன்னேற்றம் காண முடியும்.

சர்க்கார் இத்தொழிலை உதாசீனப்படுத்தி, வழக்கம்போல் நடத்த நேரிட்டால், இன்னும் பத்து வருடங்கழித்து, பெரிய நகரங்களில் இத்தொழிலாளிகள் காட்சிப் பொருள்போல் தற்பொழுது காணப்படுமளவிற்கு இத்தொழில் நிறைந்த கிராமங்களிலும் காணப்படுவார்கள்.

சித்தர் மருத்துவத்தில் முதலிடம் வகிப்பது பனங்கற்கண்டு!

கூட்டுறவு ஸ்தாபனத்தின் பணி:

ஒரு தனிப்பட்ட முதலாளி தன்னிடமுள்ள பணத்தைக் கொண்டும், மற்றவர்களிடம் கடன் வாங்கியும் ஒரு தொழிலை நடத்தி வருகிறார். இதிலுள்ள லாப நஷ்டம் அவரை மட்டும் சார்ந்தது. தனிப்பட்ட நபர்கள் ஒற்றுமையுடன் பங்கு தொகைகளை சேர்த்தும், மற்றவர்களிடம் கடன் வாங்கியும் ஒரு தொழிலை நடத்தி வருகிறார்கள். இதிலுள்ள லாப நஷ்டங்கள் மேற்படி பங்குதாரர்களைச் சார்ந்தது. உற்பத்தி பொருளை பெருக்கவும், உற்பத்தியாளர்களுக்கு போதிய ஊதியம் கிடைக்கவும் வேண்டி, தொழிலாளிகளை ஒன்று சேர்த்து அவர்களுடைய குறைந்த பங்குத் தொகைகளுடன் கூட்டுறவு ஸ்தாபனத்தைச் சர்க்கார் துவக்கி மேற்படி ஸ்தாபனத்திற்கு வேண்டிய கடனுதவிகளும் செய்து வருகிறது. இதிலுள்ள லாப நஷ்டங்கள் யாவும் மேற்படி ஸ்தாபனத்திலுள்ள மெம்பர்களைச் சார்ந்ததுதான். சர்க்கார் மேற்கூறிய உயரிய கருத்துக்களுடன்தான் கூட்டுறவு ஸ்தாபனங்களை துவக்கி வருகிறது.

போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்கு மாதம் 1-க்கு எத்தனை கேஸ் பிடிக்கவேண்டுமென்று சர்க்கார் வரம்பு விதித்து இருக்கிறபடியால், அவர்கள் தங்கள் பதவிகளை காப்பாற்றுவதற்காக, தங்களுடைய உச்சவரம்பை நிறைவேற்ற பொய் கேஸ்களும் தயாரிக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. அதுபோல் கூட்டுறவு பதிவாளர்களுக்கும் வருடத்திற்கு எத்தனை கூட்டுறவு சங்கங்கள் திறக்கவேண்டுமென்றிருப்பதை நிறைவேற்ற கூட்டுறவு ஸ்தாபனத்திற்கு லாயக்கற்ற கிராமங்களிலும், கிராமத்திலுள்ள போட்டிகளுக்குத் தகுந்தவாறு ஒன்றிற்கு மேலும், திறந்து அதற்கென்று முதலாவது செலவழிக்கப்படும். உதவித் தொகை செலவானதும் மேற்படி சங்கங்களும் மூடப்பட்டு விடுகிறது. சர்க்கார் கண்காணிப்பும் சரியானபடியில்லாததால் ஊழல்களும் மலிந்து விடுகிறது. இதனால் கூட்டுறவு தன்மையே பாதிக்கப்பட்டு, பொது ஜனங்களும் அதிருப்தியடைந்து வருகிறார்கள்.

இந்தியாவில் மொத்தம் பனைவெல்லக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் சுமார் 3,000 வரை மேற்கூறியளவில்தான் அமைக்கப்பட்டு தற்பொழுது 1,000 சங்கங்கள் வரைதான் வேலை செய்து வருகின்றன. மார்க்கட்டில் நாளடைவில் கருப்புக் கட்டி மட்டும் திடீர், திடீரென்று கூடும் குறையும். இதன் வித்தியாசம் 40 சத வீதம் வரை ஏற்படும். வியாபார முறையில்லாமல் ரோட்டில் ஏலம் போடப்படும் பொருளைப் போல் கருப்புக்கட்டி கொள்முதலும், விற்பனையும் செய்யப்பட்டு வருகிறது. இதனால் உற்பத்தியாளர்களும் கருப்புக்கட்டி விலைகொடுத்து வாங்கும் பொது ஜனங்களும் தான் பாதிக்கப்படுகிறார்கள். வியாபாரிகள் குறைந்த காலங்களில் வாங்கி சேமித்து அதிக விலை வரும்போது விற்பனை செய்து அதிக லாபமடைந்து வருகிறார்கள்.

நம் நாட்டில் பனைவெல்ல கூட்டுறவு ஸ்தாபனங்களின் எண்ணிக்கையைப் போல் அவ்வளவு அதிகமானது வேறு எந்த உற்பத்தி பொருளுக்கும் கூட்டுறவு ஸ்தாபனங்களிருக்க முடியாது என்று நினைக்கிறேன். இவ்வளவு அதிகமான கூட்டுறவு ஸ்தாபனங்களிருந்தும் கருப்புக் கட்டிக்கு இதுவரை ஒரு நிதானமான மார்க்கட் ரேட் ஏற்படுத்த முடியாமல் வியாபாரிகளைப் போல் தான் மேற்படி ஸ்தாபனங்களும் வியாபாரம் செய்து வருகிறது.

ஒவ்வொரு பஞ்சாயத்துப் போர்டு எல்லைக்குள்ளும் ஒரு பனைவெல்ல கூட்டுறவு பிரதம சங்கம் தானிருக்கவேண்டும். இது தவிர மேற்படி எல்லைக்குள் வேறு எங்கெல்லாம் அதன் பிராஞ்சுகள் தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் திறந்துகொள்ள வேண்டியது. இதன் அமைப்புபடியுள்ள ஒவ்வொரு பிரதம சங்கங்களிலும் ஒரு கூட்டுறவு இன்ஸ்பெக்டரை காரியதரிசியாக நியமிக்கவேண்டும். கூட்டுறவு இன்ஸ்பெக்டரின் பொறுப்பில் கணக்கும், பணமும் கண்காணிக்கப்படுவதோடு, நிர்வாகச் செலவுகளும் மொத்தத்தில் குறையும், ஊழல்களும் குறைந்து விடும்.

பிரதம சங்கங்கள் அதன் உற்பத்தியாளர் களிடமிருந்துதான் கொள்முதல் செய்து மேற்படி எல்லைக்குள் சில்லறை விற்பனையும், தங்கள் மாவட்ட சம்மேளனத்திற்கும் தான் விற்பனை செய்யவேண்டும். தனிப்பட்ட வியாபாரிகளிடமிருந்து கொள்முதலும், விற்பனையும் செய்யக்கூடாது.

மாவட்ட சம்மேளனங்கள் :

மாவட்ட சம்மேளனங்கள் தங்கள் எல்லைக்குள் கருப்புக்கட்டி எங்கெல்லாம் விற்பனை செய்யமுடியுமென்று கருதுகிறதோ அங்கெல்லாம் விற்பனை நிலையங்கள் (Sales Depot) திறக்கவேண்டும். மாவட்ட சம்மேளனம் தனிப்பட்ட வியாபாரிகளிடம் கொள்முதலும், விற்பனையும் செய்யக் கூடாது. எல்லா மாவட்டங்களுக்கும் பொதுவான மார்க்கட் உள்ள அதாவது மதுரை, திண்டுக்கல் போன்ற இடங்களில் அந்தந்த மாநில சம்மேளனங்கள் விற்பனை நிலையங்கள் திறக்கவேண்டும். மாநில சம்மேவனங்கள் தனிப்பட்ட வியாபாரிகளிடம் கொள்முதல் மட்டும் செய்யக் கூடாது. மேற் கூறிய அமைப்புப்படி கூட்டுறவு ஸ்தாபனங்கள் வியாபாரம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டால், ஒழுங்கான நிர்வாகங்களும், நிதானமான விலைகளும் கிடைக்கும்.

பனைப் பொருட்களை தேக்கி வைப்பதற்கும் தொழிலாளிகளுக்கு வேண்டிய பொருட்களை வாங்கி கொடுப்பதற்கும் வசதியான கட்டிடங்களைக் கட்ட, குறைந்த வட்டியில் 10 வருடக் கடனாக கூட்டுறவு சங்கங்களுக்கு கொடுக்க சர்க்கார் ஆவன செய்ய வேண்டும்.

கூட்டுறவு மெம்பர்கள், நிர்வாகஸ்தர்கள், அதிகாரிகள் நிலை

சர்க்கார் நிர்வாகங்களில் எவ்வளவு ஊழல்கள் மலிந்துவிட்டதோ, அதனைப்பார்க்கிலும், கூட்டுறவு ஸ்தாபனங்களில, நிர்வாகஸ்தர்களாலும், சர்க்கார் அதிகாரிகளாலும் ஊழல்கள் மலிந்துவிட்டதென்றும், இது ஒரு சிலருக்கு நன்மை பயக்க சர்க்கார் வசதி உண்டுபண்ணி கொடுக்க துவக்கப்பட்டதென்றும் மெம்பர்களால் எண்ணப்பட்டு, தங்களுடைய மூலதனத்தை அதிகரிக்கவும், உற்பத்தியை மேற்படி ஸ்தாபனத்தில் விற்பனை செய்யவும் பயப்படுகிறார்கள். கூட்டுறவு ஸ்தாபனம் சர்க்காருடையது என்று அநேகர் நினைத்து அதில் தலையிட பயப்படுகிறார்கள்.

தொழிலாளிகள் முதலில் கூட்டுறவு ஸ்தாபனங்கள் தங்களுக்காகவே துவக்கப்பட்டதென்றும், தங்கள் மூலதனம் அதில் போடப்பட்டிருப்பதால், மேற்படி ஸ்தாபனத்தை நமக்கும் கண்காணிக்க உரிமையுண்டு என்ற எண்ணம் ஏற்படவேண்டும். வருடா வருடம் தங்கள் மூலதனத்தை அதிகரிக்கவேண்டும். உற்பத்திப் பொருட்களை எல்லாம் மேற்படி ஸ்தாபனத்தில்தான் விற்பனை செய்ய வேண்டும். தன்கையே தனக்கு உதவி என்பதற்கிணங்க, மேற்படி ஸ்தாபனத்திலுள்ள தொழிலாளிகள் அனைவரும் நாளுக்குநாள் சர்க்கார் உதவியை குறைத்து தாங்களே மூலதனத்தைப் பெருக்கி மேற்படி ஸ்தாபனத்தை வளரச் செய்ய பாடுபடவேண்டும்.

நிர்வாகஸ்தர்களில் பலர் வியாபாரியாகவும், சம்பளமில்லாமல் தொழிலாளிகளுக்கு ஏன் உழைக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடனும், கௌரவமட்டுமிருந்தால் போதும். அதற்காக உழைக்காமலிருந்துவிடுவதும், மேற்படி தொழிலாளிக்காக சர்க்காரால் ஒதுக்கப்படும் பணங்களையும் காலா காலத்தில் வாங்கி கொடுப்பதில்லை. ஒரு சிலர் தவறுதலாகவும் கையாள முற்படுகிறார்கள்.

பிரதம சங்கத்தில் உற்பத்தியாளர்களும், மற்றவர்களும் மெம்பராகயிருக்கலாம். இதில் பஞ்சாயத்தார்களில் 75 சத வீதம் தொழிலாளியும், 25 சத வீதம் மற்றவர்களுக்குமிருக்க வேண்டும். மாவட்ட சம்மேளனங்களிலும், மாநில சம்மேளனங்களிலும் சங்கங்களின் பிரதிநிதிகள்தானிருக்க வேண்டும். பனைப் பொருள் வியாபாரிகள் மேற்படி நிர்வாகங்களி

கட்டாந்தரையிலும் செழிப்புடன் வளர்வது பனை ஒன்றே!

விருக்கவேகூடாது. மேற்கூறிய நிர்வாகஸ்தர்கள் பனைத்தொழில் எவ்வித கஷ்டம், எவ்வளவு முக்கியமானது என்பதை நன்குக உணர்ந்து, தங்களுடைய பொறுப்புள்ள கடமைகளை ஏற்றுமையுடன் நடத்திவரவேண்டும். மேற்படி ஸ்தாபனம் முன்னேற்றம் காணவேண்டுமானுல், சுருங்கச் சொன்னுல் நிர்வாகஸ்தர்களுடைய பொறுப்பில்தானிருக்கிறது.

பனைவெல்ல கூட்டுறவு சங்கங்கள் பெரும் பகுதி முன்னேற்றம் காணுத பகுதிகளிலிருப்பதால், சர்க்கார் அதிகாரிகள், போக்குவரத்து கஷ்டம், பொழுதுபோக்கு மற்ற வசதிகளுக்கும் லாயக்கில்லை என்று உணர்ந்து அப்படிப்பட்ட இடங்களுக்கு இவர்கள் போவதே அரிது. இவர்கள் தங்களுக்கு வசதியான இடங்களில் உட்கார்ந்துகொண்டு கூட்டுறவு புஸ்தகங்களை குமஸ்தாக்கள் மூலம் கொண்டு வரச் செய்து, அதிலிருந்து மேலதிகாரர்களுக்கு தாங்கள் செய்த வேலையின் திறமையை குறித்து அனுப்புவதுடன், தாங்கள் அக்கிராமங்களுக்கு போனதாகவும் படியையும் எழுதி வாங்கிக்கொள்கிறுர்கள். கூட்டுறவு புஸ்தகங்களை அதிகாரிகளிடம் காண்பிக்க கொண்டுபோன செலவுகளை ஷை செலவினற்காக கணக்கு எழுத முடியாமல், வேறு செலவு இனத்தின் மூலம் எடுத்துக் கொள்கிறுர்கள். இதனுல் பஞ்சாயததார்களும், குமஸ்தாக்களும் தப்பான வழியில் ஈடுபட தைரியமுண்டாகிறது.

பெரும்பகுதி இதனுடைய நிர்வாகங்கள் படிக்காதவர்களிடம்தானிருக்கிறது என்பதை சர்க்கார் நன்கு உணர்ந்து, அதிகாரிகள், நன்ருக படித்தவர்கள், அறிவாளிகள், அறியாத மக்களுக்கு நன்மை செய்வார்கள் என்ற உயரிய நோக்கத்தோடு மேற்படி ஸ்தாபனத்தை கண்காணிக்க நியமித்திருக்கிறுர்கள். அதனுல் சர்க்கார் அதிகாரிகள் தங்களுடைய கடமை உணர்ச்சியை நன்ருக சிந்தித்து மேற்படி ஸ்தாபனங்களில் ஆக்க வேலைகளில் ஈடுபட்டு, அதிகாரிகள் என்ற எண்ணத்தை மறந்து சேவை செய்யும் தொண்டர்கள் எனகருதி மெம்பர்கள் மத்தியில் பழகும்படி நடந்துகொள்ளவேண்டும்.

பொது

மேற்கூறியளவிற்கு சர்க்காரும், நிர்வாகஸ்தர்களும் ஆக்கவேலையில் ஈடுபட்டால் ஷை தொழிலைப்பொறுத்து ஆறு லட்சம் குடும்பம் வாழ வழியிருக்கிறது. சர்க்கார் இன்னும் உதாசீனமாகயிருந்துவிட்டால், இவர்களுக்கு தொழிலில்லாமல், வெளிகாட்டிலிருந்துவரும் அகதிகள்போல் இவர்களையும் கண்காணிக்க வேண்டிய நிலை வந்துவிடும். இதனுல்தான் பிற்கால நிலையை அறிந்த தத்துவஞானியான மகாத்மா காந்தி அவர்கள் இத்தொழிலுக்கு முக்கியத்வம் கொடுக்க வேண்டுமென்று, இந்தியாவில் ஏழ்மையை விரட்டவும், கருப்புக் கட்டி நல்ல சத்துள்ள உணவு என்ற கருத்தை 3—5—1943-ல் வெளியிட்டு அதற்காக பாடுபட்டும் வந்தார்கள். நமக்கு வேண்டிய சீனியும், வெல்லமும் பனைமரங்களிலிருந்து கிடைக்கும்போது பயிரிடும் நிலத்தில் கரும்பு சாகுபடி செய்யவேண்டியதில்லை என்று விநோபாஜி அவர்களும் அடிக்கடி உபதேசம் செய்து வருகிறுர்கள்.

இதிலிருந்து இந்த பனைத்தொழிலுக்கு எவ்வளவு முக்கியத்வம் கொடுக்கவேண்டுமென்ற எண்ணத்தை சர்க்கார் உடனே தங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கிணறு வெட்டும் இயந்திரம்

காஸக்ஸ்தான் இயந்திர நிர்மாணத் தொழில் நிறுவனத்தார் ஆழமாகக் கிணறு தோண்டும் ஓர் இயந்திரத்தை உற்பத்தி செய்துள்ளனர். அதன் திறன் வருமாறு: மிகக் கடினமான பாறையில் ஒரு தடவையில் 20 லீனியர் மீட்டர்கள் துளையிடும். 50 மீட்டர் ஆழமும், 150 மி. மீட்டர் விட்டமும் உள்ள துளைகளை இதன் உதவி கொண்டு தோண்டமுடியும்.

Rc. No. 18129/64-VJ 2.

மாநிலக் கதர், கிராமக் கைத்தொழில்கள் குழு,
2, தேசிகாச்சாரி ரோடு, சென்னை-4,
16—4—1964.

சுற்றிக்கை

விஷயம் :—தொழில் கூட்டுறவு சங்கங்கள்—பேரவை, கமிட்டிக் கூட்டங்கள் நடத்துதல் சம்பந்தமாக —

புதிய கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட 95-வது விதி கூறுவது :

சங்கங்களின் கூட்டங்கள் :

(1) சங்க அலுவலகம் இயங்கிவரும் கட்டிடத்தைத் தவிர வேறு எந்த இடத்திலும் சங்கத்தின் பேரவைக் கூட்டம் நடைபெறக் கூடாது; அல்லது, சங்கங்களின் தலைமை அலுவலகம் இயங்கி வரும் இடங்களில், உறுப்பினர்கள் மிக எளிதில் வரக்கூடிய இடங்களைத் தவிர வேறு கட்டிடங்களிலும் பேரவைக் கூட்டம் நடைபெறக்கூடாது;

(2) சங்கத்தின் அலுவலகக் கட்டிடத்தில்தான் கமிட்டிக் கூட்டங்கள் நடைபெற வேண்டும்; அல்லது சங்கம் இயங்கிவரும் வட்டாரத்தில் உறுப்பினர்கள் எவ்வித தங்கு தடையின்றி எளிதாக வர சௌகரியப்படக்கூடிய எந்தக் கட்டிடத்திலும் கமிட்டிக் கூட்டம் நடத்தலாம்; இவை தவிர எக்கட்டிடத்திலும் கூட்டம் கூட்டப் படக்கூடாது.

மேலே குறிப்பிட்ட 95-வது விதியில் கூறப்பட்டபடி நடந்துகொள்ளுமாறு பனைவெல்ல உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள் உள்பட எல்லாத் தொழில் கூட்டுறவு சங்கங்களின் கவனத்துக்குக் கொண்டு வருமபடி கிராமக் கைத் தொழில் அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(ஒ-ம்.) டி. வி. இராமானுஜன்,
காரியதரிசிக்காக,
கதர்—கிராமக் கைத்தொழில் கழகம், சென்னை - 4.

உற்பத்தி - விற்பனை விதிகள் திருத்தம்

உறுப்பினர்கள் அவசியம் கவனிக்க!

கருப்பட்டி உற்பத்தி செய்யும் கூட்டுறவு சங்கங்களின் ஒவ்வொரு உறுப்பினரும் விற்பனைத் துறையிலும் பொறுப்பு வகிப்பதற்காக, சங்கங்களின் 29-வது பைலா விரிவு படுத்தப்பட்டிருக்கிறது.

பைலா நெ. 29 (ஏ)

(1) குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள மரங்களிலிருந்து பதநீர் இறக்கி கருப்பட்டி உற்பத்தி செய்ய லைசென்ஸ் பெற்றுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் அளிக்கவேண்டிய கருப்பட்டியின் அளவை டைரக்டர்கள் போர்டு நிர்ணயிக்கும். அந்தந்த ஊரின் நிலைமைக்குத் தக்கபடி, தொழில் நுட்ப அல்லது மேற்பார்வையாளர்களைக் கலந்துகொண்டு கருப்பட்டியின் அளவு நிர்ணயிக்கப்படும். இப்படி நிர்ணயிக்கப்பட்ட அளவை அங்கீகரிப்பதற்காக பதிவாளருக்குத் (Registrar) தெரியப்படுத்தவேண்டும்.

பைலா நெ. 29 (பி)

பஞ்சாயத்தார்கள், டைரக்டர்கள் குறிப்பிட்டுள்ள அளவு கருப்பட்டி பதிவாளரால் அங்கீகரிக்கப்பட்டால், சங்கத்தின் மூலமாக அதை விற்பனை செய்வதற்காக, கருப்பட்டி உற்பத்தி செய்ய லைசென்ஸ் பெற்ற ஒவ்வொரு உறுப்பினரும் அதை ஒப்படைக்க வேண்டும். அதை (கருப்பட்டியை) ஒப்படைக்கும்படி கடிதம் கிடைத்தபின்னரும், கருப்பட்டியை ஒப்படைக்காவிட்டால், ஒவ்வொருதடவைக்கும், ரூ. 5-க்குமேற் போகாமல் அவருக்கு அபராதம் விதிக்கப்படும். தொடர்ந்து இரண்டு தடவைகள் அபராதத்தை அவர் கட்டவில்லையானால், சங்க உறுப்பினர் பதவியிலிருந்து அவர் விலக்கப்படுவார்.

பைலா நெ. 29 (சி)

உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட கருப்பட்டியை மாவட்ட கருப்பட்டி விற்பனைக் கூட்டுறவு சம்மேளனத்தின் (ஏதாவது இயங்கி வந்தால்) மூலம் சங்கம் விற்பனை செய்யும். மாவட்டச் சம்மேளனம் தமக்குச் சாதகமான விலைக்கே அக்கருப்பட்டியை விற்பனை செய்யும். இந்த விற்பனையில், கூட்டுறவு சங்கம் உறுப்பினர்களுக்கு ஒரு ஏஜெண்டாகவே இருக்கும். அதன்மூலம் விற்கப்படும் கருப்பட்டியின் மதிப்புக்குத் தக்கபடி ரூபாய் ஒன்றுக்கு 6 நயாபைசாவுக்கு மேல் போகாமல் சங்கத்திற்கு கமிஷன் அளிககப்படும்.

இந்த பைலாக்களை அனுசரித்து நடக்கும்படி தங்கள் கீழ் உள்ள உற்பத்திக் கூட்டுறவு சங்கங்களுக்கு உத்தரவிடும்படி கிராம கைத்தொழில்கள் அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(ஒ-ம்.) டி. வி. இராமானுஜன்,
காரியதரிசிக்காக,
கதர்—கிராமக் கைத்தொழில் கழகம், சென்னை - 4.

காலஞ்சென்ற பாரதப் பிரதமர் நேருஜியின் அந்திம யாத்திரை.